mpirai

# இளம்பிறை




நபி காவியம்

வானொலி:
என்ன நடக்கின்றது?

★ ★ ★

இஸ்லாமிய
வரலாற்றுக் கதைகள்

★ ★ ★

புதுமெய்க் கதைகள்

யானைக் கதை

பூனைக் கதை

திருக்கடைக்காப்பு

நினைவஞ்சலி



வம்பர் - டிசம்பர் 1972 ★ 50 சதம்

# செய்யது பீடி

தொலைபேசி: **32301**




★ தரத்தில் தன்னிகரற்றது
★ தலைநகரிலே தலைசிறந்தது
★ தரணியெங்கும் புகழப்படுவது
★ எல்லோரும் விரும்பிப் புகைப்பது
★ விற்பனையில் முன்னணியில் நிற்பது

செய்யது பீடியே!

## செய்யது பீடி டிப்போ

192, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.

*The Popular Centre for all*

**Building Material**

**&**

**Machineries**

**Telephones: 32956 - 32028 - 32007**

## Next time when you require

- ★ *Building Materials*
- ★ *Pumping Machinery*
- ★ *RiceHullers*
- ★ *Grinding Mills*
- ★ *Diesel Engines*
- ★ *Generating Plants*
- ★ *Luxol Paints, etc.*

Call at

## K. N. ABDUL CADER RAWTHER & CO. LTD,

**312, Sri Sangaraja Mawatha, Colombo-10**

Our Prices are most competitive

# எஸ். பொ. வின்
# புதிய நூல்கள் நான்கு

**அப்பையா** — ரூ 2.00

வசனநடை கைவந்த வல்லாளரான எஸ். பொ. இயற்றிய புதுத் தமிழ்க் காவியம். இக்காவியத்தின் மூலம் கவிதைத் துறைக்கு புதிய உத்தி ஒன்றும் அறிமுகமாகின்றது.

**வலை** — ரூ 3.25

சாணக்கியனும், அசோகனும் வாழ்ந்த வரலாற்றுப் பின்னணியிலே, ஐந்து களங்களிலே நிறைவுறும் வண்ணம் 'வலை' என்னும் நாடகம் பின்னப்பட்டிருக்கின்றது. முற்றிலும் புதிய அநுபவத்திற்குள் இந்நூல் அழைத்துச் செல்கின்றது.

**எஸ். பொ. அறிக்கை** — ரூ 3.50

இளம்பிறை எம். ஏ. ரஹ்மானின்
திருக்கடைக்காப்பு
இணைந்தது.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் சேமமுற வளர்வதற்கான வழிமுறைகளும், தற்கால இலக்கியப் பிரச்சினைகளும் இந்நூலிலே விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

**?** — விலை ரூ 7.00

பல்வேறு இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தி தமிழ் இலக்கிய - இலக்கணம் பற்றிய அங்கதச் சுவை பொருந்திய நூல். கருத்துக்கும் கற்பனைக்கும் சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்தாக அமையும் வகையில் இலக்கிய விமர்சனம், ஆற்றல் இலக்கியமாக இந்நூலிலே சுவையூட்டுகின்றது.

---

என்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.


மாலை 8 — பூ 2 - 3

நவம்பர் - டிசம்பர் - 1972



வானொலி :
என்ன நடக்கின்றது 5

இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

எஸ். பொ. அறிக்கை :
திருக்கடைக் காப்பு 49

நபி காவியம் 9
எஸ். எம். கமாலுத்தீன்

வ. அ. இராசரத்தினம்

விகசித்த முல்லை 62

ஓர் உண்மைக் கதை 17
ஒரு யானைக் கதை 41

எம். ஏ. ரஹ்மான்

33 காருண்யமுள்ள கலீபா
35 பதவி
37 ஆபரணம்
38 ஈத் பெருநாள்

அண்ணல்

12 இஸ்லாமிய வரலாற்று முன்னோடிகள்

46 ஒரு பூனைக் கதை
இரசிகமணி கனக-செந்திநாதன்

எஸ். பொ. எழுத்துக்கள்



இளம்பிறை
திங்கள் வெளியீடு
நிர்வாக ஆசிரியர்:
எம். ஏ. ரஹ்மான்
அலுவலகம்:
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13 இலங்கை
தந்தி: அரசு - கொழும்பு
பேசு: 36067

ILAMPIRAI
Literary Monthly
Managing Editor:
M. A. RAHMAN
Office:
231, Wolfendhal Street,
Colombo-13 (Ceylon)
Cable: ARASU - COLOMBO
Call: 36067


இளம்பிறையிற் பிரசுரமாகும் ஆற்றலிலக்கிய வகைகள் புனைவுகளே. கருத்துக்கள் கட்டுரையாளரின் சுயேச்சை; சொந்தம்.




# வானொலி :

## என்ன நடக்கின்றது?

வீடு பற்றி எரிகிறது.........

இந்த வீடு: ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச் சேவை.

'பிடுங்குவது ஆதாயம்!' என்று செயற்படுகின்றது ஒரு கோஷ்டி!

'எரிகிற வீட்டிலே பிடுங்குவது ஆதாயம்' என்று செயற்படும் கோஷ்டியை 'திருடர் கோஷ்டி' என்றுதானே அழைப்பீர்கள்? ஆனால், அந்தக் கோஷ்டியை — ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச் சேவை என்ற எரிகிற வீட்டிலே பிடுங்குவது ஆதாயம் என்று செயல்படும் கோஷ்டியை — மகத்தான சோஷலிஷ அபிவிருத்தியாளர் என மகிமைப்படுத்த வேண்டும் என்ற புதிய பாடத்தை கற்பிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய பாடத்தின் சுருதி நேர்மைக்கும் நியாயத்திற்கும் பொருந்துவதாக இல்லை.

பட்டப் பகலிலே, வெட்ட வெளியிலே இயற்றப்படும் இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க யாருமில்லை. 'தேசிய நலனைப் பாதுகாக்கும் காவல் நாய்கள் நாங்களே! எங்கள் சுதந்திரத்தைப் பறிக்கப் பத்திரிகை மசோதா கொண்டு வருவது மகா அதர்மம்!' என்று குடம் குடமாகக் கண்ணீர்விடும் தேசியத் தினசரிகள், நியாயத்தின் இந்தக் கற்பழித்தலைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

எத்தகைய 'நாய்கள்'? குரைக்கக்கூடத் தெரியாத நாய்கள்! அவற்றிற்கு ஏதோ வியாதியோ என்ற ஐயத்திலே நுணுகிப் பார்த்ததிலே, 'இந்த அநியாயத்தைச் சுட்டிக் காட்டினால், அரசாங்க விளம்பரங்கள் கிடைக்காமல் போய் விடுமே' என்று தமிழ் 'நாய்கள் தலையிலே கை வைத்துக் கொள்ளுகின்றன! தேசிய நலனிலே எத்தகைய அக்கறை உள்ள நாய்கள் பார்த்தீர்களா?

இதனாலே தான், வீடு பற்றிக்கொண்டே இருக்கின்றது. ஆதாயத்தைப் பிடுங்கும் கோஷ்டி பிடுங்கிக்கொண்டே இருக்கின்றது!

★ ★ ★

ஊர் மத்தியிலே அந்த வீடு. அது ஒரு தர்மச் சத்திரம் போலவும். காலத்திற்குக் காலம் யார் யாரோ தமது பசியைப் போக்க உதவியது.

அந்த வீட்டிலே பசி போக்கிய சில தோழர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அந்தத் திட்டம் பரம இரகசியமானது. அந்தத் திட்டத்தினைப் பல கட்டங்களாகச் செயற்படுத்தத் தீர்மானித்தார்கள்.

'அந்த வீட்டிலே தமிழரசு வௌவால்களும் திராவிடக் கழகச் சிலந்திகளும் குடியிருக்கின்றன; அதனைச் சுத்தப் படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்த வீடு சோஷலிஸ சத்திரமாக மாறும்' என்று அந்தத் தோழர்கள் அவ்வூரிலே வாழ்ந்த பெரியவருடைய காதிலே வத்தி வைத்து விட்டார்கள். அந்தப் பெரியவர் நல்லது செய்ய விரும்புபவர். சோஷலிஸத்திலே பற்றுள்ளவர். வௌவால்களையும் சிலந்திகளையும் கண்டால் அவருக்கு வலு பயம். பெரியவருடைய இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்துவதுதான் தோழர்களுடைய முதலாவது திட்டம்.

'வௌவால்களா? சிலந்திகளா? கண்டீர்களா! உடனே உள்ளே செல்லுங்கள். அவற்றை விரட்டித் துப்பரவு செய்யுங்கள். அந்த வீடு சோஷலிஸ சத்திரமாக விளங்க வேண்டும்' என்று அந்தப் பெரியவர் உடனடியாக அனுமதி வழங்கினார்.

'தோழர்கள்' உள்ளே நுழைந்தார்கள்.



சற்று நேரத்திற்கெல்லாம் அந்த வீடு தீப்பற்றி எரியலாயிற்று.

தோழர்கள் அவசர அவசரமாக அவ்வீட்டிலே கிடந்த பொருள்களைச் சுருட்டிக்கொண்டு ஓடத் துவங்கினார்கள்.

பெரியவருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''சுத்தம் செய்ய உள்ளே சென்றீர்கள். இப்பொழுது தீப்பற்றி எரிகிறதே!'' என்று பெரியவர் அலறினார்.

''மாற்றம் என்பது புரட்சி. புரட்சியின் போது தீ பரவும். விஷமிகள் யாராவது தீ வைத்திருப்பார்கள். நிச்சயமாக சோஷலிஸ விரோதிகள்தான் தீ வைத்திருப்பார்கள்!'' என்று தோழர்கள் கூறினார்கள்.

''அப்படியானால் வாருங்கள் தீயை அணைப்போம்.'' என்றார் பெரியவர்.

''தீயை அணைப்பதா? அந்தத் தீயிலே வௌவால்களும் சிலந்திகளும் பொசுங்கிவிடும் என்பது தெரியவில்லையா?'' என்று தோழர்கள் கேட்டார்கள்.

''அது சரி. அத்துடன்கூட வீடும் எரிந்து சாம்பராகிவிடும் அல்லவா?'' என்று பெரியவர் பதறினார்.

''உள்ளே இருந்த பொருள்களை எல்லாம் நாங்கள் பிடுங்கிக்கொண்டு வந்துவிட்டோம். வெறும் வீடும், வௌவால்களும், சிலந்திகளும் எரியட்டும்! வாழ்க தீ!'' என்று தோழர்கள் கோஷமிட்டார்கள்.

''என்னப்பா நீங்கள் சொல்வது?'' என்று பெரியவர் அங்கலாய்த்தார்.

''நீங்கள் பேசுவது சோஷலிஸம். ஆனால், நாங்கள் யார் தெரியுமா? நாங்கள் கம்யூனிஸ்டுகள். எங்களுடைய சித்தாந்தம் உங்களுக்குப் புரியாது,'' என்று கூறிய தோழர்கள் கட கடத்துச் சிரிக்கலாயினர்.

★ ★ ★

பெரியவர் பார்த்துக் கொண்டு நிற்கின்றார். காவல் நாய்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றன. வீடு பற்றி எரிந்து கொண்டே இருக்கின்றது!

# அருள்வாக்கி

'வித்துவதீபம், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர், கண்டியை அடுத்துள்ள தெல்தொட்டையைச் சேர்ந்த போபிட்டி என்ற ஊரில் 1866ஆம் ஆண்டிற் பிறந்தார். தாயார் பெயர் ஹவ்வா அம்மாள். தந்தையார் பெயர் ஆ. பி. அல்லாபிச்சை ராவுத்தர். கண்டியில் அக்காலத்திலே புகழ் பூத்த கல்விக்கூடமான குயின்ஸ் அகாடெமியில் தமிழும் ஆங்கிலமும் பயின்றார். அவர் பல அவதானங்களைப் பயின்றார். 'தீப சித்தி' அவர் பயின்ற அவதானங்களுள் முக்கியமானது. தமது பதினொருவது வயதிலேயே கவிதை பாடத் தொடங்கி 'மெய்ஞ்ஞான அருள் வாக்கி' என்ற விருதினைப் பெற்றார்.

பதினாறு வயது இளைஞராக அவர் திகழ்ந்த காலத்திலேயே யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற வெண்பாப் போட்டியிலே கலந்து வெற்றியீட்டினார். காட்டுபாவா சாகிபு கும்மி, மாலைகள், பதிகங்கள், பிள்ளைத் தமிழ் முனாஜாத்துகள், அந்தாதிகள், கும்மிகள், திருப்புகழ், ஊஞலஞ்சி முதலாம் பல்வேறு வகைப் பிரபந்தங்களாக முப்பதுக்கு மேற்பட்ட கவிதை நூல்களை இயற்றியுள்ளார். 12-6-1912இல் புலவர் அசனா லெப்பை தலைமையில் வித்துவதீபம் என்ற விருதினைப் பெற்றார். யாழ்ப்பாணம் ஐதுறூஸ் மக்காமிலே மூன்று வாரமாக நிகழ்த்திய சொற்பொழிவுகளிலே அவர் எடுத்து விளக்கிய இல்முகளை (மார்க்க அறிவு) நயந்து சுவைத்த யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள், புகழ்ப்பாவணி ஆசிரியர் சு. மு. அசனாலெப்பைப் புலவரின் தலைமையிலே இந்தப் பட்டமளிப்பு விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். அருள்வாக்கி தமது 52 வயதிலே காலமானார்.

இவரே ஈழந் தமிழ் வளத்தின் மூத்த முஸ்லிம் புலவர். மலையகப் புலமையின் விடிவெள்ளி. இத்தகைய புலவரேறின் அடைக்காலமாலை இந்த இதழிலே பிரசுரமாகியுள்ளது. அது இளம்பிறை மறுபிரசுரத் திட்டத்தின் கீழும் கிடைக்கும்.

# நபி காவியம்

— அண்ணல்



## மதிப்பு

உந்தமர் குணங்கள் யாவும்
        ஒருமித்து நிறைந்த அன்புப்
புத்திரர் முஹம்மத் ஊரின்
        புகழுக்கே உரிய ராகி
சத்தியந் தவறாத் தன்மை
        தன்னைப் போல் பிறரில் நேசம்
வைத்தவர் பன்னி ராண்டு
        வயதினை அடைந்தார் அன்றே. 78

''நம்பிக்கைக் குரியார்'' என்ற
        நாமமே நாட்டு மக்கள்
தம்மிடை முஹம்ம துக்குத்
        தரித்தது; அங்கு வாழும்
தம்மொத்த சிறுவர்க் குள்ளே
        தனித்துவப் போக்கும் பண்பும்
''உம்மி''யை உயர்த்தி வைக்க
        உதவின உளங்க ளிந்தார். 79

சிரியாவிற் சென்று செய்யும்
        சீர்பொருள் வியாபா ரத்தின்
வருவாயில் அரபு நாடு
        வாழ்வதே உண்மை அந்த

கருமத்தில் அபுத்தா லிபும்
கருத்தொடு ஆயத் தங்கள்
உரியவா றொழுங்கு செய்தார்
உடன்செல்ல முஹம்மத் நின்றார். 80

"அன்பினால் எமை ஆட் கொண்ட
அருமருந் தன்றாய்! மிக்க
துன்பங்கள் பிரயா ணத்தில்
தோற்றிடும் உமைவ ருத்தி
இன்பங்கள் அடைதல் என்றன்
இதயத்தில் சற்றும் இல்லை
பண்புடை மகனே நீங்கள்
பாலர்இப் பயணம் வேண்டாம்" 81

அன்புயர் பெரிய தந்தாய்!
அகிலத்தில் கூறு கின்ற
இன்பமும் துன்பம் யாவும்
இதயத்தைப் பொறுத்த தன்றோ?
துன்பமும் இன்ப மாகும்
துணிவுண்டேல் பிரயா ணத்தில்
என்பணி பெரிதே இல்லை
எனினும் சிற்றேவல் தன்னை 82

முன்நின்று செய்வ தற்கு
முடியாதா?" என்ற கேள்வி
தன்தம்பி மகனின் வாயின்
தனிச்சுவை அமிழ்தாய்த் தேற
"என்னரும் மகனே தங்கள்
எதிர்காலம் நலமே ஆக
பின்தொடர்" என்றே கூறிப்
பிரயாணந் தொடங்கி னார்கள். 83

சிரியாவிற் 'புஸ்ரா' என்ற
தேசத்தைச் சேர்ந்த போது
கிறிஸ்தவ வேத நூலில்
நெஞ்சத்தைக் கிடத்தி ஆய்ந்த
பெரியாராம் 'புஹைரா' கண்டார்
பேச்சற்று நோக்கி நின்றார்
உரியாரைக் கண்ட தான
உற்சாகம் உவப்புக் கொண்டார். 84



பின்னொரு நாள்பி றக்கும்
பெரியா ரைப் பற்றி வேதம்
முன்குறிப் பிட்டி ருந்த
முறைப்படி முஹம்ம தைத்தன்
கண்ணினால் கருத்தில் கண்டார்
கரஞ் சுட்டி "இதோ இருக்கும்
சின்னவர் யாரோ?" என்னச்
செப்பினார் அபூத் தாலிபு. 85

"என்னரும் மைந்தர் முஹம்மத்
தென்பது பெயரென்" றோத
இன்னவர் தந்தை இன்று
இருக்கவே முடியா தன்றோ?"
"அன்னதே இவரென் தம்பி,
அப்துல்லா மகனே யாவர்
அன்னையின் கருவின் போதே
அவர்மறு வுலகஞ் சேர்ந்தார்." 86

"அப்படித் தானி ருக்கும்
அநாதைதான் எதிர்கா லத்தில்
செப்பரி தான நல்ல
சிறப்பெலாம் பெறுதற் குள்ளார்
இப்படி அழைத்த ழைத்து
ஏகிடில் யூதர் தம்மால்
தப்புகள் நேர்தல் கூடும்
தரியாது செல்தல் நன்றே." 87

என்பதைப் பெரிய தந்தை
ஏற்றதும் வியாபா ரத்தை
முன்பதை விடச்சி றப்பாய்
இலாபங்கள் முழுமை பெற்று,
அன்பொடு முஹம்ம தைத்தன்
அகத்தினில் தூக்கி வைத்துச்
சென்றனர் மக்கா நோக்கிச்
சேர்ந்தனர் குறைகள் அற்றே. 88

— வளரும் —

# இஸ்லாமிய எழுத்துலக முன்னோடி



இற்றைக்குச் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி எது என்பது பற்றி முஸ்லிம்களே தூய தமிழ் மொழியிலே பத்திரிகைகளில் கட்டுரைகளும் கடிதங்களும் எழுதி விவாதமிட்டுக் கொண்டிருந்த காலத்தில் ''தமிழே எம் தாய் மொழி'' என்று சதா காலமும் தமது மேடைப் பிரசங்கங்களாலும், ஆதாரபூர்வமான கட்டுரைகளாலும் வலியுறுத்திச் சிறப்பு மிக்க பணியாற்றி வந்த தமிழ் அபிமானி அல்ஹாஜ் வ. மி. சம்சுத்தீன் அவர்களின் மறைவு தமிழ் உலகிற்குச், சிறப்பாக முஸ்லிம் தமிழ் உலகிற்கு மிகப் பெரும் இழப்பாகும்.

இன்று தமிழகத்திலும், இலங்கையிலும் இஸ்லாமிய இலக்கிய உலகில் நடமாடும் எழுத்தாளர் குழாத்தின் சிறந்த முன்னோடிகளில் ஒருவராக வைத்து எண்ணத்தக்க ஜனாப். சம்சுத்தீன் அவர்கள் தென்னிந்தியாவில் ஸ்ரீ வைகுண்டத்தில் இவ்விருபதாம் நூற்றாண்டின் உதயத்தோடேயே (5-1-1900) தோன்றினார்கள். தமது இளம் வயது முதலே இலங்கையில் வாழ்ந்து இந்நாட்டு முஸ்லிம்களின் சமூக, கலாச்சார வாழ்க்கையில் பெரும் பங்கு கொண்டு வந்த இப்பெரியாரை — பழம் எழுத்தாளரை—நீண்ட காலமாக நான் அறிவேன். சிறப்பாக இலக்கியத்துறையில் அவர்களோடு மிக்க பயனுள்ள தொடர்பு எனக்கு இருந்து வந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணி வீரர்களான அலி சகோதரர்கள், காயிதே ஆஜம் முஹம்மதலி ஜின்னா போன்றவர்களதும் அறிவுத்துறையிலே இந்திய முஸ்லிம்களின் விழிப்புணர்ச்சிக்கு வித்திட்ட சர் செய்யிது அஹ்மத்கான் போன்றவர்களதும் அளப்பரிய தியாக

**எஸ். எம். கமாலுத்தீன்**





மிகு சேவைகளே தமிழகத்திலும் இலங்கையிலும் ஜனாப். சம்சுத்தீன் போன்ற பல இஸ்லாமிய உணர்ச்சியும், பணி மனப்பான்மையும், கொண்ட எழுத்தாளர்களையும் மற்றும் கர்ம வீரர்களையும் தோற்றுவிக்க ஏதுவாயிருந்தது.

இஸ்லாத்தின் ஏகத்துவத்திலும் (தௌஹீத்) முஸ்லிம்களின் ஒருமைப்பாட்டிலும் உறுதியான ஈடுபாடுள்ளவர்கள் ஜனாப் சம்சுத்தீன் அவர்கள். இலங்கை முஸ்லிம்களிடையே சில ஆண்டுகளுக்கு முன் இன அடிப்படை பேணி எழுந்த மும்முரமான விவாதங்களின் போதும், பிரிவினை உணர்ச்சிகள் மேலோங்கிய போதும் முஸ்லிம்களின் தனிப் பெரும் பண்பான சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் தமது எழுத்துக்களின் மூலமும், சொற்பொழிவுகளின் மூலமும், அவர்கள் இடையறாது வலியுறுத்தி வந்ததை நாம் என்றும் மறக்க முடியாது.

இஸ்லாத்தின் தனித்தன்மை பேணுவதிலும், மதத்தின் பெயரால் நிகழும் சீர்கேடுகளை வன்மையாகக் கண்டிப்பதிலும் அவர்கள் என்றும் சளிப்படைவதில்லை. ''அவ்ராது'' எனும் சிறிய நூலில் ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் முன்னுரையாக எழுதியுள்ள பின்வரும் வசனங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கனவாகும்.

''முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி, க்வாஜா முஈனுத்தீன் ஷிஸ்தி போன்ற மேதாவிகளின் வாரிசுகள், வழித் தோன்றல்கள் எனக் கூறிக் கொண்டு சிலர் காணப்படுகின்றனர். அம்மகான்கள் வளர்த்து விட்டுச் சென்ற தீன் பயிரை



இன்றைய முஸ்லிம் எழுத்தாளர் பரம்பரைக்கு ஆதர்சனமாகத் திகழ்பவர் காலஞ்சென்ற அல்ஹாஜ் வ. மி. ஷம்சுத்தீன் அவர்களாவர்.

அவர் 1967 ஆம் ஆண்டிற் காலமானார். அவர் நினைவாக 'இளம்பிறை விசேட இதழொன்று 1969 மே மாதம்' வெளியாயிற்று. அவர் காலமானபோது, இளம்பிறைக்கென, கொழும்பு பொது நூலக பதில் அதிபர் ஜனாப் எஸ். எம். கமாலுத்தீன் அவர்கள் எழுதியுதவிய கட்டுரையையே இங்கு பிரசுரித்துள்ளோம். ஐந்து ஆண்டுகளின் பின்னரும் இக்கட்டுரையைப் படிக்கும் பொழுது ஷம்சுத்தீன் சாஹிபின் நினைவிலிருந்து அகலா வண்ணம் எம்மைப் பிணைக்கும் தன்மைத்ததாய் இது விளங்குகின்றது

மேய்ந்து சுகமாக வாழ்கின்றனர். மார்க்க அறிவு படிக்க மக்களை ஊக்குவித்த மகா மேதைகளின் போர்வையிற் திரியும் இக்கலியுக ஷெய்குகள் மக்களிட

மிருக்கும் அரைகுறை மார்க்க அறிவையும் களைந்து விடுகின்றனர்''

இவ்வாறாக, மதத்தின் பெயரால் நாட்டில் நிலவும் போலிகளைச் சாடும் வேளையிலே அவர்களின் தவறுகளின் காரணமாக மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலையையும் ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

''அல்லாஹ்வையும் ரசூல் (ஸல்) அவர்களையும் மறந்து திரிகின்றனர் மக்கள். அவர்கள் சொல்லிய போதனைகளை விட்டுவிட்டு அவர்களின் (மகான்களின்) சமாதிகளை அலங்கரிப்பதிலேயே, ஏன் அந்த சமாதிகளில் கும்பிடுபோடுவதிலேயே இன்பங் காண்கின்றனர், நம் சகோதரர்கள். என்ன அறியாமை!''

ஜனாப் சம்சுத்தீன் அவர்களிடம் சிறப்பாக நான் காணக்கூடியதாயிருந்தது அவர்களுடைய அடக்கமும், எவருடனும் இனிமையாகப் பழகும் பண்புமாகும். உண்மையை உள்ளவாறு எடுத்துரைக்க அவர்கள் எப்போதும் தயங்குவதில்லை. எழுத்துலகில் உலவியதுபோலவே அவர்கள் அரசியலிலும் ஆர்வத்தோடு ஆனால் அமைதியான முறையில் ஈடுபாடுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள்.

சமீப காலத்தில் உலக முஸ்லிம்களின் க னத்தைப் பெரிதும் பெற்றிருந்தது பாக்கிஸ்தானின் எழுச்சியாகும். பாக்கிஸ்தானின் தோற்றத்திற்கு பலவகையாலும் பேராதரவளித்தவர்கள் தென்னிந்திய முஸ்லிம்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. இவர்களுடைய தன்னலமற்ற பணியைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் எழுதிய ''பாக்கிஸ்தான் விளக்கம்'' எனும் நூல். தமிழக முஸ்லிம்களிடையே பாக்கிஸ்தான் பற்றிய விளக்கத்தை ஏற்படுத்துமுகமாக ஆசிரியர் அவர்கள் உதவிய இந்நூல், அவர்களுடைய அரசியல் ஈடுபாட்டுக்குச் சான்றாகவும் அமைந்துள்ளது.

முதுபெரும் எழுத்தாளர் ஜனாப் தாவூத்ஷா அவர்களுக்கும் எமது ஆசிரியர் சம்சுத்தீன் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் தமிழ் மொழியில் இஸ்லாத்தின் சிறப்புக் கூறும் நூல்கள் போதிய அளவு இல்லாமலிருந்த காலத்தில் அக்குறை களைய முற்பட்டவர்கள். இஸ்லாம் வாளால் பரப்பப்பட்ட மதமென்ற பிரச்சாரம் வெளுப் பற்றிருந்த காலத்தில் அதற்கு எதிர்ப்பிரச்சாரம் செய்வதில் ஆர்வங்காட்டியவர்கள். இஸ்லாத்தின் பண்டைய பெருமையை தமிழக முஸ்லிம்களுக்கு உணர்த்த வேண்டுமென்ற பேராவினால் உந்தப்பட்ட ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் தங்களுடைய ஆற்றலுக்கமைய ''தற்கால முஸ்லிம்களின் நிலை'' என்ற நூலை 1929 ம் ஆண்டில் வெளியிட்டார்கள்.



இந்த நூலுக்கு முன்னுரை வழங்கிய மூதறிஞர் தாவூதஷா அவர்கள் ஜனாப் சம்சுத்தீன் அவர்களுடைய அரிய பணியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:–

' இப்படிப்பட்ட துறையில் இதுவே முதல் நூலானமையின் ... .................இம்மட்டேனும் பிரயாசையெடுத்து இவ்வாசிரியர் இத்துணைத்தூரம் இந்நூலை எழுதி வெளியிட்டமைக்கு இத்தமிழ் நாடு இவருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளதாகும்.''

ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் தற்கால முஸ்லிம்களின் நிலை என்ற நூலில் ''முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கு வழி'' என்ற ஓர் அத்தியாயத்தில் கூறியுள்ளவை எமது சிந்தனைக்குரியதாகும். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் இலட்சியமாக்கிக் கொண்ட கொள்கைகள் இவ்வத்தியாயத்தில் மிளிர்கின்றன. அவர்கள் விழைந்த சேவை இதில் பிரதிபலிக்கப்படுகின்றது. இவ்வத்தியாயத்தில் ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் அன்று முஸ்லிம்களை நோக்கி விடுத்த வேண்டுகோள் இன்றைக்கும் பொருந்துவதாகும். உதாரணத்துக்காக இரண்டொரு கருத்துக்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

''முதலில் அந்நிய மதஸ்தனொருவன் உங்களைப்பார்த்து நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று வினவுவானாயின் பட்டாண் என்றாவது லெப்பை என்றாவது துருக்கியன் என்றாவது ராவுத்தர் என்றாவது, மரைக்காயர், அம்பலம் என்றாவது சொல்லாமல் முஸ்லிம் என்று சொல்லிக் கொள்ள வேண்டும்.

''இஸ்லாத்தின் தத்துவத்தை அன்னிய மதஸ்தார்களுக்கு எடுத்துச் சொல்லு முன், முதலில் உங்களையும் உங்கள் இஸ்லாமிய சமூகத்தையும் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்''

இவ்விதமான பல சீர்திருத்தக் கருத்துக்களையே ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் நாட்டில் பரப்புவதில் ஆர்வமுள்ளவர்களாயிருந்தார்கள் முஸ்லிம்கள் கட்டுப்பாட்டுடன் ஸ்தாபன ரீதியாக முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு அவர்கள் கூறியுள்ள ஆலோசனைகள் அவர்களுடைய பரந்த நோக்கையும், இஸ்லாமிய உணர்ச்சியையும் நன்கு புலப்படுத்துவதாயிருக்கின்றன. அவர்கள் கூறும் ஆலோசனைகள் பின்வருமாறு:

''இஸ்லாத்தைப் பரப்புதல், முஸ்லிம் யுவர்களுக்கு உபந்நியாசம் செய்யவும், வியாஸமெழுதவும் பயிற்றுவித்தல், சிலம்ப வித்தை போன்ற தேகப்பயிற்சி கொடுத்தல், அந்நிய மதஸ்தர்களுடன் சந்தோஷமாகக் கூடிப் பழகுதல், ஆண்களுக்கும், பெண்களுக்கும் கல்வியைப் பயிற்றுவித்தல், வாசகசாலைகளை ஏற்படுத்துதல், கூண்டு, உரூஸ், பஞ்சா, முதலியவைகளை (விக்கிரஹ வணக்கங்களை) ஒழித்தல்.''

மேலே கூறியவைபோக இஸ்லாமிய கலாசாரம் தக்க முறையில் வளரவும், ஆங்கிலமும் விஞ்ஞான அறிவும் பெருகவும், பரந்த நோக்குடைய ஆலிம்களை உருவாக்கவும் ஜனாப். சம்சுத்தீன் அவர்கள் வழி கூறியுள்ளதை நோக்குமிடத்து அவர்கள் இன்றைய உலகில் முஸ்லிம்கள் தலைசிறந்து விளங்குவதற்கான அடிப்படையை முற்றும் உணர்ந்தவர்களாயிருந்ததை நாம் அறியக்கூடும்.

“அறிவுக்குப் பொருத்தமற்ற அண்டப்புளுகு மூட்டைகள் நிறைந்த பழய இஸ்லாமிய நாவலெனப்படும் தமிழிலிருக்கும் சிலவற்றைப் பகிஷ்கரித்த பலாஸிபாவையும், விஞ்ஞான சாஸ்திரத்தையும் போதித்தல், இஸ்லாமிய கலைகளைச் சொல்லிக் கொடுக்கும் மத்ரஸாக்களில் தமிழையும் ஆங்கிலத்தையும் உருதுவையும் சேர்த்துப் பயிற்றுவித்தல்” என்பன போன்ற முயற்சிகளை அவர்கள் முஸ்லிம்கள் மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஜனாப். சம்சுத்தீன் அவர்கள் நூல் நிலைய வளர்ச்சியிலும் ஆர்வங் கொண்டிருந்தார்கள். கொழும்பு, கும்பனித் தெரு முஸ்லிம் நூல நிலையத்தில் மிகுந்த தொடர்பு கொண்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் அந்நிலைய கணக்கும் பரிசோதகராகப் பயன் கருதாது உழைத்து வந்தார்கள்

நர்ன் ஏற்கனவே குறிப்பிட்ட நூல்களைத் தவிர வியாசக் கோவை என்ற நூலையும் அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் உமர் கய்யாமின் ரூபய்யாத்தை மொழிபெயர்த்தும், உமறுப்புலவரின் முதுமொழி மாலையைப் பதிப்பித்தும் உள்ளார்கள். இவையனைத்திற்கும் மேலாக ஜனாப் சம்சுத்தீன் அவர்கள் சந்தர்ப்பமேற்படும் போதெல்லாம் எழுதி வந்த கட்டுரைகளை நாம் விசேஷமாகக் கூறவேண்டும். இலங்கை முஸ்லிம்களிடையே ஜனாப் சம்சுத்தீனை பெருமளவில் அறிமுகப்படுத்தியவை அவர்களது கருத்தாழம் வாய்ந்த கட்டுரைகள் தான். தென்னகத்திலிருந்து வரும் “முஸ்லிம் முரசு” என்ற சஞ்சிகை ஜனாப் சம்சுத்தீனை தனது கௌரவ ஆசிரியராக்கிக் கொண்டது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

ஜனாப், சம்சுத்தீன் அவர்கள் தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியில், சிறப்பாக எழுத்துலகில் அரியதோர் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள், இந்த வகையில் நாம் அவர்களுடைய சேவா உள்ளத்தையும், அறிவு வளர்ச்சியில் கொண்ட ஆர்வத்தையுமே அன்னாரின் தகைமைக்கு மதிப்பீடாகக் கொள்ள வேண்டும். இன்று இலங்கையிலுள்ள பெரும்பாலான முஸ்லிம் எழுத்தாளர்கள் ஏதோ ஒருவகையில் ஜனாப், சம்சுத்தீன் அவர்களின் பயன்தரு உறவு கொண்டவர்களென்று கூறலாம். அன்னாருடைய நன்முயற்சிகளையும், அருங்கருத்துக்களையும் மனத்தே பதித்து நடப்பதே நாம் அவர்களுக்கு செலுத்தும் நட்புக் கடனாகும்.

# வலை

## சமர்ப்பணம்

ஓர் உண்மைக் கதை

**1950**-ஆம் ஆண்டின் முற்பகுதி என்று ஞாபகம். எனது முதலாவது இந்தியத் திக்விஜயத்தை மிகப் பரிதாபகரமாக முடித்துக் கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே சேர்வதற்கான வேளையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கம்யூனிஸ்ட் கட்சி உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாண மண்ணிலே வேரூன்றி மூன்று ஆண்டுகள் ஆகியிருந்தன. தோழர் மு. கார்த்திகேசுவின் அயராத உழைப்பாலும், உதாரணமான வாழ்க்கையாலும் மாணாக்கர் உலகம் கம்யூனிஸ்ட் கட்சியின்பாற் கவரப்பட்டுக் கொண்டிருந்தது. மாணாக்கருடைய வாசிப்புத் தாகத்திற்குத் தீனியிடும் நோக்குடன், கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தைப் பரப்பும் நூல்களை விற்கும் நிலையமாகப் பாரதி புத்தகசாலை நிறுவப்பட்டது. காங்கேசன்துறை வீதியில், சீதா சோடாத் தொழிற்சாலைக்கு முன்னால் அமைந்துள்ள கட்டடத்திலே அந்தப் புத்தகசாலை குடிபுகுந்தது. அதன் முதலாவது முகாமையாளராக நான் நியமிக்கப்பட்டிருந்தேன். புத்தக வியாபாரம் மிகவும் மந்தம். இருப்பினும், விற்பனைக்குள்ள நூல்களை விழுந்து விழுந்து வாசித்துக் கொண்டிருந்ததினால், பொழுது ஆனந்தமாகக் கழிந்து கொண்டிருந்தது. அப்பொழுதும் நான் ஓர் எழுத்தாளன். எழுத்து வேலைகளை இரவு வேளைகளிலே வைத்துக் கொள்வேன்.

அக்காலத்தில் எனக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் டானியல், டொமினிக், புஷ்பராஜன் ஆகியோராவர். டானியலும் டொமினிக்கும் அக்காலத்திலேயே எழுதுவதிலே ஆர்வங்காட்டினர். அவர்களிருவரும் தினமும் மாலையில் பாரதி புத்தகசாலைக்கு வருவார்கள். கடற்கடை என்றும், சுப்பிரமணியப்

பூங்கா என்றும் எழுத்துலகக் கனவுகளுடன் அலைந்து திரிவதும் ஆனந்த மயமாக இருந்தது. நண்பர் புஷ்பராஜன் சில சமயங்களில் மட்டுமே எங்களுடன் சேருவார். அவரை நாங்கள் 'புஷ்பி' என்றுதான் அழைப்போம்.

பாடசாலை நாள்களிலே தினமும் புஷ்பி பாரதி புத்தகக் கடைக்கு வருவது வழக்கம். அவர் சீனியர் பரீட்சை எடுத்துவிட்டு 'ரிசல்ட்' டுக்காகக் காத்திருந்தார். கடைக்கு அயலிலிருந்த நாவலர் பாடசாலையிலே அவர் படித்துக் கொண்டிருந்தபடியால், சாப்பாட்டு இடைவேளையின்போது கடைக்கு வருவது அவருக்கு வசதியாக இருந்தது. அந்தச் சமயங்களிலே இருவரும் ஒவ்வொரு திறீ றோஸ் சிகரட்டுகளைப் புகைத்துத் தீர்ப்பது வழக்கம். 'யார் முதலிலே சிகரெட்டைப் புகைத்து முடிப்பது?' என்ற ஒரு போட்டி வைத்துக் கொள்ளலாம் என்று புஷ்பி கூறினார். நானும் சம்மதித்தேன். போட்டியில் தோல்வி எனக்குத்தான். அடுத்த நாளும் அதே போட்டி. தோல்வி எனக்குத்தான். மூன்றாம் நாளும் எனக்கே தோல்வி. இந்தத் தோல்வியின் பின்னணியில் ஏதோ 'சதி' இருக்கின்றது என்பதைப் புஷ்பியின் சிரிப்பு உணர்த்துவதாக இருந்தது. என் தோல்வியை நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்ட பின்னர், அவர் அந்தச் 'சதி'யை விளக்கினார். சிகரெட் வாங்கப் போவது புஷ்பிதான். வரும் வழியில், தனது சிகரெட்டை மெதுவாகக் கசக்கி, சிகரெட்டிற்குள்ளிருக்கும் புகையிலையின் பேர் பாதியை நிலத்திலே உதிர்த்து விடுவார். அதுவே 'சதி' அதன் பின்னர் போட்டி நடைபெறுவதில்லை. 'சிகரெட்' சமா தொடர்ந்தது.

புஷ்பி பரமார்த்த இலக்கியச் சுவைஞன். டானியலும், டொமினிக்கும் அக்காலத்தில் எவ்வாறு எழுத்தாளர்களாக உருவாகிக் கொண்டிருந்தார்கள் என்ற வர்த்தமானம் அவருக்குத் தெரியும். இருப்பினும், எழுதவேண்டும் என்ற முனைப்பு அவருக்கு ஏற்பட்டதில்லை. 1955 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நான் கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது இராமச்சந்திரா எல்கடுவாவிலே ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருந்தார். (புஷ்பராஜனைப் பற்றிச் சொல்லவந்து, இராமச்சந்திரா என்ற புதிய பாத்திரம் ஒன்றினை நுழைப்பதாகத் தோன்றுகின்றதா? புஷ்பராஜனின் பதிவுப் பெயர் அதுதான் என்பது பின்னாலேதான் தெரிய வந்தது.) வேளை கிடைக்கும் பொழுது கம்பளைக்கு வருவார். அப்பொழுது எழுதுவதில் அவர் ஆர்வங் காட்டினார். தமது எழுத்துச் செப்பத்திற்கு என்னுடைய உதவியை நாடியதில்லை. தன் ஆற்றலிலே அவருக்கு அப்படி ஒரு நம்பிக்கை. இ. புஷ்பராஜன் என்ற பெயரிலே அவர் சில சிறுகதைகள் எழுதியுள்ளார். பிற்காலத்திலே அவர் மீண்டும் தன்னை ஓர் இலக்கியச்



சுவைஞராகவே வரித்துக் கொண்டதினால், அவர் எழுதிய கதைகள் வெளிவந்த கதை நறுக்குகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை நான் அறியேன்.

1956 ஆம் ஆண்டு ஜனவரி முற்பகுதி. என் மனைவியுடன் யாழ்ப்பாணத்திலே தங்கியிருந்தேன். எம்முடையது காதல் திருமணம். மனைவிக்கு இரு மரபும் துய்ய வந்தவள் என்ற பெருமை. மறுபுறம் ஒரு இலட்சம் ரூபா சீதனத்துடன் விவாகம் செய்யலாம் என்ற தகுதி எனக்கு. எனவே, இரு பகுதியாரின் எதிர்ப்பின் மத்தியிலேயே எமது திருமணம் நடந்தது. ஆனால், என் மனைவியைத் தமது மூத்த மருமகளாக ஏற்று ஆசீர்வதிக்க என் 'அப்பையா' முந்திக் கொண்டார். அவருடைய அழைப்பினைச் சங்கை செய்யும் வகையிலேயே யாழ்ப்பாணத்திலே தங்கியிருந்தேன்.

வேறு ஏது தொற்றி, எழுத்துலகிலே அஞ்ஞாத வாசம் பூண்டிருந்தேன். அதைத் துறக்கும் ஆர்வமும் மிகுந்திருந்தது. இந்த ஆர்வம் டொமினிக் போன்ற என் எழுத்துலக நண்பர்களுக்கு நஷ்டமான சங்கதி. எனவே, அவர்கள் என் ஆர்வத்திற்கு உற்சாகம் அளிக்கவில்லை. இருப்பினும், புஷ்பியும் அவருடைய அண்ணனான மதுரகவி நாகராஜனும் என் எழுத்துலக மறு பிரவேசத்தினை வெகு ஆர்வத்துடன் வரவேற்றார்கள். அக்காலத்தில் நாகராஜன் ஈழகேசரி என்னும் வாரப் பத்திரிகையின் உதவி ஆசிரியராக இருந்தார். ஈழகேசரியிலே என் கதைகள் வெளிவருவதற்கு அவரே உதவினார்.

புஷ்பி இன்னொரு வழியிலே உதவ முன் வந்தார். என் மனைவிக்கு இரட்டையர் தமக்கை. அவர்கள் இருவருக்கும் திருமணமாகவில்லை. என் ஜாதிக் கலப்பு அவர்களுடைய திருமண வாய்ப்புகளைப் பாதித்தன என்பதை உணர்ந்திருந்தேன். இந்த விஷயத்தினை புஷ்பிக்கு வியாகூலத்துடன் விளக்கிக் கொண்டிருந்தேன். எழுத்துலகில் புஷ்பி எப்படிச் சுய ஆற்றலில் மட்டும் நம்பிக்கை வைத்திருந்தாரோ, அவ்வாறே சமூக சீர்திருத்தம் என்பது வாழ்ந்து காட்ட வேண்டிய சத்தியம் என்பதிலே அவர் நம்பிக்கை வைத்திருந்தார். என் வீட்டுப் பிரச்சினைகளை மனந்திறந்து பேசியதற்கு இதுதான் காரணம். ''உங்களுடைய கோரிக்கையைப் பற்றி அநுகூலமாகவே சிந்தித்துப் பார்ப்பேன். எதற்கும் நான் ஒரு தடவை மட்டக்களப்புக்கு வருகின்றேன்,'' என்று வாக்களித்து, மட்டக்களப்புக்கு என்னைப் பயணமனுப்பி வைத்தார்.

வாக்களித்தது போலவே புஷ்பி மட்டக்களப்பிற்கு வந்தார். என் மனைவியின் அக்காளான சுந்தரலக்ஷ்மியைப் பார்த்தார். மணத்திற்குச் சம்மதம் என்றார். அவர் அண்ணன் மதுரகவி நாக

ராஜாவும், என் மாமனார் வன்னியசிங்கமும் ஆசிர்வதிக்க, இராமச்சந்திரன்-சுந்தரலக்ஷ்மி தம்பதிகளாயினர். மிகச் சிறப்பான முறையிலே நிறைவேறிய அந்தச் சீர்திருத்தத் திருமணம் இப்பொழுதும் என் மனக்கண்ணிலே பசுமையாகத் தெரிகின்றது.

விளைவுகளைப் பற்றி யோசிக்காது, அநியாயத்திற்கு எதிராகப் பொங்கியெழும் போராளி. அந்த இயல்பு சத்தியத்தின் மறு உருவமாகவே அவரிடங் குடிகொண்டிருந்தது. அவர் கற்பித்துக் கொண்டிருந்த பாடசாலையின் தலைமையாசிரியர் ஒரு சுயநலமி. மாணாக்கரின் நலனிலே அக்கறை இல்லாதவர். அநியாயத்தின் பக்தர். எனவே, அவருடன் புஷ்பி நல்லுறவு நிலவ நியாயமில்லை. ஒரு தடவை தலைமையாசியர் இயற்றிய அநியாயத்தைப் பொறுக்க மாட்டாது, அவரை நையப்புடைய அடித்திருக்கின்றார். அவ்வளவுதான். அவர் உதவி ஆசிரியர் வேலையிருந்து நீக்கப்பட்டார்.

தலைப்பிள்ளைத்தாச்சியான மனைவியை அழைத்துக் கொண்டு, மட்டக்களப்பு வந்து சேர்ந்தார். அவர் கலங்கவில்லை. மற்றவர்களுடைய தாராளத்திலும் தயவிலும் வாழக் கூச்சப்பட்டார். ஆசிரியராக வாழ்ந்தவர் என்ற கௌரவத்தை அவர் பாராட்டியதில்லை. குடும்பத்தைக் கௌரவத்துடன் காப்பாற்ற எந்தத் தொழிலும் அவருக்கு அற்பமாகத் தோன்றவில்லை. தொழில் மகத்துவத்தை வாழ்க்கையிலே பயின்றார். கல்லறுக்கும் தொழிலாளியாகவும் வாழ்ந்திருக்கிறார். கிராமங்களுக்குச் சென்று மரக்கறிகள் வாங்கி, அங்காடி வியாபாரம் செய்திருக்கின்றார். ஈரோட்டு வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கின்றார்.

அந்தக்காலத்திலே இலாபத்தையோ நஷ்டத்தையோ பெரிதுபடுத்தியதில்லை. சாயங்கால வேளைகளிலே விளையாட வருவார். டிவ்ஸ்ட், செஸ், கடுதாசிக் கூட்டம் என்று எந்த விளையாட்டிலும் அவருக்கு ஆர்வம் உண்டு. எந்தச் சந்தர்ப்பத்திலாவது இத்தகைய விளையாட்டுகளிலே அவரை நான் வெற்றி கொண்டதாக ஞாபகம் இல்லை. இந்தக் காலத்தில் நான் அதிகமாக எழுதினேன். நாடகங்களை மேடையேற்றினேன். என்னுடைய ஆக்கங்களின் முதலாவது வாசகன் அவர். அக்கறையோடு வாசித்து, என்னை உற்சாகப்படுத்துவதை தன் கடமைகளுள் ஒன்றாக வரித்திருந்தார். அவருடைய ரஸனை உணர்ச்சிக்கு மசிந்துவிட்ட நான், இந்தக் காலப் பகுதியிலேதான் அதிகமான ஆங்கில சினிமாக்களைப் பார்த்தேன்.

புஷ்பி ஒரு இலட்சியச் சகலனாக வாழ்ந்தார். ஒரு காலத்திலே கிழக்கிலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தொழிற் சங்கத்தினதும் முக்கிய பிரமுகராகத் திகழ்ந்தேன். தமிழரசுக் கட்சி உச்சமான



செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், அந்த இயக்கத்திற்கு எதிரான பிரசாரத்திற்கு நானே தலைமை தாங்கினேன். இதனால், தமிழரசு அபிமானிகளுடைய தூற்றலுக்கும் வசைக்கும் உள்ளாகியுள்ளேன். ஒரு தடவை தமிழரசுப் பிரசாரக் கூட்டம் ஒன்று பயனியர் வீதியிலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஓர் ஓரமாக நின்று கூட்ட நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன், எனக்குச் சற்றுப் பின்னால் புஷ்பி நின்று கொண்டிருந்தார். அப்பொழுது தமிழரசுக்குண்டர் மூவர் என்னை வளைத்துக் கொண்டார்கள். நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஒரு அறை. நான் நிலத்தில் விழுந்துவிட்டேன். மறுகணம் என்னைத் தாக்கிய இருவர் வேலியுடன் மோதி விழுந்தார்கள். மூன்றாமவன் செய்வதறியாது திகைத்து நின்றான். புஷ்பி வெற்றி வீரனாக என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

கம்யூனிஸ்ட் கட்சி அலுவல்களிலும், தொழிற் சங்க விஷயங்களிலுமிருந்து நான் ஒதுங்கிக் கொண்டேன். அதற்கான காரணங்களை எழுதுவதற்கு இதுவல்ல சமயம். எனக்காக அவரும் அந்த இயக்கத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ளவில்லை. கொள்கை. நியாயம் என்று வந்து விட்டால், அவர் உறவு முறைகளைப் பாராட்டுவதில்லை. ஒரு காலத்தில் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் செயலாளராக நான் பணிபுரிந்துள்ளேன். நான் அச்சங்கத்திலிருந்து வெளியேறிய பிறகு, புஷ்பி இலங்கைப் போக்குவரத்துச் சபையிலே கொண்டக்டராகச் சேர்ந்தார். அதிலிருந்து அந்தத் தொழிற் சங்கத்தைக் கட்டி வளர்ப்பதிலே அவர் முன்னணியில் நின்று உழைத்தார்.

அவர் கொண்டக்டராகிய பின்னர் இருவரும் நாளாந்தம் சந்தித்து அளவளாவும் வாய்ப்புகள் குறையலாயிற்று. ஒரு சமயம் அவர் மனைவியான அக்காளும் என் மனைவியான தங்கையும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு மனஸ்தாபப்பட்டுக் கொண்டார்கள். மனைவிமார் சண்டை புருஷன்மார் சண்டையாக மாறுவது இயற்கை. ஆனால், இச் சண்டையின் பின்னர். அவர் என்னை அழைத்து, ''மாஸ்டர், இருவரும் சண்டையிட்டுக் கொண்டது வேதனைக்குரியது. ஆனால், அவர்களுடைய சண்டை நமக்கிடையே உள்ள நட்பினைப் பாதிக்க அனுமதிக்கலாகாது'' என்று கேட்டார். என்னுடன் நட்பினைப் பேணுவதில் அவருக்கு அவ்வளவு அக்கறை இருந்தது.

புஷ்பி (என் பிள்ளைகள் அவரை ஐயா என்று அழைப்பார்கள்) நல்ல சாப்பாட்டினை நன்றாகச் சுவைத்துச் சாப்பிடுவார். பார்க்க வடிவாகவும் இருக்கும். இறைச்சி, நண்டு, கணவாய் ஆகியன அவருக்குப் பிரீதியான சாப்பாட்டு வகைகள்.

ஒரு சமயம் டொமினிக் (டொமினிக் ஜீவா) என் வீட்டிலே தங்கியிருந்தார். 'பாதுகை' என்ற தமது இரண்டாவது சிறுகதைத் தொகுதியிலே இடம் பெற்ற கதைகளைத் திருத்தியும் புதுக்கியும் தரும்படி கேட்டார். அப்பணியிலே ஈடுபட்டிருந்த பொழுது புஷ்பி வந்து சேர்ந்தார். ''ஜீவா, தண்ணீரும் கண்ணீரும்' என்ற தொகுதிக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்ததும், மாஷ்டருக்கு முட்டைக் கணவாய் அனுப்பி வைத்தாயல்லவா? நல்ல முட்டைக் கணவாய் மச்சான். இந்தத் தொகுதிக்கும் மாஷ்டர் எழுதித்தாருர். நன்றி மறக்காமல் நல்ல முட்டைக் கணவாய் அனுப்பி வை!'' என்று புஷ்பி இரண்டு அர்த்தங்கள் தொனிக்கக் கூறினுர்.

எனக்கு ஒரு பாடகன் மகன் இருக்கின்ருன். அவன் அம்மாவுக்குச் செல்லம். அந்த உரிமையை எடுத்துக் கொண்டு, ''தொக்கம்மா'' என்று நையாண்டி செய்வான். ''இறைச்சி என்ருல் தொக்கம்மா சமைத்துத்தரத் தின்ன வேணும்,'' என்று என் மனைவியின் சமையலை புஷ்பி புகழுவார்.

கொண்டக்ரராகச் சேவையிலே சேர்ந்த புஷ்பி கடின உழைப்பின் காரணமாக டிப்போ பரிசோதகராகப் பதவி உயர்ந்தார். பதவி உயர்வு அவருடைய மனே நிலையை மாற்றவில்லை. மிகவும் எளிமையாகவும் வஞ்சகமற்றும் ஊழியர்களுடன் பழகிக் கொண்டார்.

இரண்டு வருஷங்களுக்கு முன் நான் கொழும்பு வாசியானேன். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி குடும்பம் மட்டக்களப்பிலே வசிக்கட்டும் என்று தீர்மானித்தேன். ஆண் துணை இல்லை என்ற குறையை உணராத வகையிலே புஷ்பி ஒத்தாசையாக இருந்தார்.

என் ஒரே மகள் மேகலா பூப்பெய்திய பொழுது நான் கொழும்பில். அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. போக்குவரத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. அத்துடன், என் இலக்கிய விரோதிகள் நான் கிளர்ச்சிக்காரருடைய பங்காளன் என்ற புரளியைக் கிளப்பியிருந்தனர். எனவே, என் மகளுடைய 'குப்பைத் தண்ணீர்' வார்க்கும் சடங்கிற்கு என்ருற் போகமுடியவில்லை. அப்பா இல்லாத போதும், ஐயா எல்லாவற்றையும் நிறைவு செய்தார்.

அதிகாலையில் என் மகள் மேகலா தயாரிக்கும் கோப்பி குடித்தாற்ருன் புஷ்பிக்குப் பத்தியம். ஒவ்வொரு நாளும் கோப்பி கொடுக்கும் பொழுது ஐயாவுக்கு ஏதாவது வேலை கொடுப்பது மேகலாவின் வழக்கம். ஐயா தினமும் உத்தியோக நிமித்தமாக



பலவார் சென்று வருபவரல்லவா? எனவே, மேகலா சொல்லும் வேலைகள் ஐயாவுக்குச் சிரமங் கொடுப்பதில்லை. ஒரு சமயம், ''ஐயா, என்னுடைய செருப்பு அறுந்துவிட்டது. பால்கார அண்ணன் அதைத் தைப்பித்து வைப்பதாகக் கூறினுர். பின்னேரம் வேலைவிட்டு வரும் பொழுது தயவு செய்து எடுத்துவாருங்கள்'' என்று கூறினுள்.

பின்னேரம் ஐயா வந்தார்.

''செருப்பைக் கொண்டு வந்தீர்களா ஐயா?'' என்று மேகலா ஆவலுடன் கேட்கின்ருள்.

''இந்த மேகலா என்னைச் செருப்புக் காவி என்று நினைக்கின்ருளா?'' என்று கடிந்து கொண்ட ஐயா, ''மறந்துபோனன்; நாளைக்கு எடுத்து வாறன்,'' என்று மித்தியின் 'தொக்கம்மா'வுக்கு விவகாரத்தை விளக்கினுர்.

இப்படிக் குறுக்கும், நெடுக்குமாக புஷ்பியின் நினைவுகள் என்னில் சிதறிப் பரம்புகின்றன.

'வலை' என்ற என் நாடக நூல் அரசு வெளியீடாக அண்மையில் வெளிவந்துள்ளது. அந்த நூலை அந்த புஷ்பிக்கு நினைவஞ்சலியாகச் சமர்ப்பித்துள்ளேன். அலைக்கழியும் நினைவுகளைத் திருப்தி செய்யும் ஓர் உபாயம் என்றும் சொல்லலாம். சமர்ப்பண வாசகம் நூலின் சுவைஞருக்கு.

— எஸ். பொ.

எஸ். பொ. வின்
இனியனும்
சகலனுமான
'புஷ்பி'

ஆர். இராமச்சந்திரா,



## அரசு வெளியீடு

231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13, இலங்கை

| | |
|---|---|
| தோணி — சிறுகதைகள் | விலை. ரூ. 2/00 |
| வாழையடி வாழை - சரிதம் | விலை. ரூ. 2/00 |
| பகவத்கீதை வெண்பா | விலை. ரூ 3/50 |
| இளமைப் பருவத்திலே! - சிறுவர் நூல் | விலை. ரூ. 1/25 |
| மரபு - உருவகக் கதைகள் | விலை. ரூ. 2/00 |
| ஈழத்து இலக்கிய வளர்ச்சி - வரலாற்று நூல் | விலை. ரூ. 3/50 |
| அண்ணல் கவிதைகள் | விலை. ரூ. 2/25 |
| பரியாரி பரமர் - பேனாச் சித்திரம் | விலை. ரூ. 1/90 |
| இலக்கிய உலகம் - கவிதை | விலை. ரூ. 1/40 |
| காப்பியச் சொற்பொழிவுகள் | விலை. ரூ. 3/50 |
| புதுயுகம் பிறக்கிறது - சிறுகதைகள் | விலை. ரூ. 2/75 |
| மஹாகவியின் குறும்பா | விலை. ரூ. 1/85 |
| ரசிகர் குழு போட்டிக் கதைகள் | விலை. ரூ. 1/30 |
| வீ - சிறுகதைகள் | விலை. ரூ. 4/40 |
| நபிமொழி - நாற்பது - கவிதை | விலை. ரூ. 1/50 |
| முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம் | விலை. ரூ. 3/00 |
| இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் | விலை. ரூ. 6/00 |
| ஞானப் பள்ளு | விலை. ரூ. 4/00 |
| தீபன் — உருவகக் கதைகள் | விலை. ரூ. 2/50 |
| ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு | விலை. ரூ. 5/50 |
| மாணிக்கரின் காந்தி | விலை. ரூ. 1/50 |
| காந்தி தரிசனம் | விலை. ரூ. 2/50 |
| காந்தி பாமாலை | விலை. ரூ. 3/00 |
| காந்தீயக் கதைகள் | விலை. ரூ. 3/00 |
| காந்தி போதனை | விலை. ரூ. 7/35 |
| மத்து - கட்டுரைக் கோவை | விலை. ரூ. 6/00 |
| அவாந்தி கதைகள் | விலை. ரூ. 2/00 |
| எஸ். பொ. அறிக்கை | விலை. ரூ. 3/50 |

பிஸ்மில்லாஹிற்றஹ்மானிற்றஹீம்.

# அல்லாகுத்த ஆலாவின்பேரில்

## அடைக்கலமாலை.

### காப்பு.

நேரிசை வெண்பா

திருவாக வெப்பொருட்குந் தீதறமே லாகித்
தருவாக நின்ற தனிக்கோவே — குருவாக
வெந்தனுளத் தாயுன்மே லின்புற்றோர் மாலைசொலக்
கந்தமுட னேயருள்வாய் காப்பு.

### அவையடக்கம்.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

சீர்பூத்த விலக்கணலக் கியவாரி யுண்டெழுந்து
திசைகள் போற்றப்
பேர்பூத்த மழையெனச்செந் தமிழ்மாரி தனைப்பொழியும்
பெரும்பா வல்லோர்
நேர்பூத்த சபையிடத்து மிருந்தறியாச் சிற்றறிஞ
னிகழ்த்தும் பாவிற்
சூர்பூத்த புயக்கவிஞர் பிழைகாண்கி லெள்ளாது
தயைசெய் வீரே.

### நூல்.

கட்டளைக்கலித்துறைகள்.

பூரணமாக நிறைந்தே யெவைக்கும் புராதனமாய்க்
காரண ஞானக் கடலாய் விரிந்து கலைஞருள்ளத்
தாரணந் தந்த திருமுத லேநபிக் கன்புடனே
பாரணந் தந்த விறையேயுன் பக்க லடைக்கலமே. (க)

வாய்ந்தோர்ந்த பக்குவர் ஞானவுல் லாசர் மறைதெளிந்தே
காய்ந்தோர் மவுத்தின் முடிவறிந் தோரணி காரணத்தி
னேய்ந்தோர் தவத்தி னியல்புணர்ந் தோரிக லேதறுத்தோ
ராய்ந்தோ ரறிவினு மாயவொண் ணுயுன் னடைக்கலமே. (௨)

மாதா பிதாவுஞ் சகோதரர் மக்கண் மனைவிசுற்றந்
தாதா வெனத்தந்த வீகையர் யாருந் தயங்கவுயிர்
சேதார மாயுட லத்தைவிட் டாயபின் செம்முகபுர்க்
காதார மான றஹ்மானுன் பக்கலடைக்கலமே. (௩)

பஞ்சொத்த பஞ்சைய னீமான் றழைக்கப் பகலிர வெந்
நெஞ்சொத்த நந்நெறிக் காளாக்கு வாயரு ணீதிகெட்ட
நஞ்சொத்த மூட ரிணக்கந் தவிர்த்தரு ளுதமிட்டே
யஞ்சத் தகுந்தஜப் பாறேயுன் பக்க லடைக்கலமே. (௪)

பொல்லாத தீதனென் றெல்லாரு மென்னைப் புறக்கணித்துச்
சொல்லாத மாவசை சொல்லினுங் கொல்லினுஞ் சோர்வுபடே
னெல்லாஞ்செய் வல்லநின் கோபம் பெரும விருக்கநிதம்
அல்லாகு வென்றுனைக் கெஞ்சுகின் றேனுன்னடைக்கலமே. (௫)

வெளியே மயக்கிடுங் கோலத்தி னுலென்ன மேவுமருள்
வெளியே தனிநிழ லானந்த வாரிதி மேன்மைமழைத்
துளியே யதிலொரு நூற்றினிற் பங்கு தொகுத்திடத்தண்
ணளியே புரிந்தருண் மாலிக்குன் பக்க லடைக்கலமே. (௬)

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க மாநிலத்திற்
பேயொன்று நெஞ்சக னேவுன் னெளிவைப் பிரித்தறிவே
னுயொன்றுஞ் செய்கைய னென்றெள்ளி டாது நடுவுநிலை
யாயொன் றிடப்புரி வாயிறை யேயுன் னடைக்கலமே. (௭)

தங்கமும் பொன் மணியும்பன் னிதியுஞ் சவதரிக்கத்
திங்களு நாளுந் திரிந்தலைந் தெங்கணுந் தேடிமிகப்
பங்கமும் பட்டுழன் றேயடைந் தேற்கருள் பற்றிடச்செய்
யங்கமுந் தந்த விறையேயுன் பக்க லடைக்கலமே. (௮

கோபத்தி னல்வருந் தீங்காய தெவ்வையுங் கோதறுத்துப்
பாபத்துக் காளாக்கி டாதருள் செய்வதுன் பாரமன்றித்
தாபத்துக் காஞ்சக்க ருத்தினுந் துன்பந் தனைச்சகியே
னுபத்துக் காத்தரு ளாண்டவ னேயுன் னடைக்கலமே (௯)



நீதி தவறிய மூடரைச் சேர்ந்து நினைவழிந்து
தீதி லருதினந் தோயாது காத்தெனைத் தீனவரோ
டேதி லருள்பெற மெய்ஞ்ஞான பாதத்தி லேற்றுவிப்பா
யாதியு மந்தமில் லாதஅல் லாவுன் னடைக்கலமே. (௰)

என்பினைக் கெளவு ஞமலியொப் பாமெனக் கேயணுகுந்
துன்பினை நீக்கவல் லோயல்ல வோவிதைச் சொல்லமற்ற
வின்பினுக் குற்ற விறையுள னேவிம்மை யம்மைக்குநல்
லன்பினுக் கன்னையின் மேலான வாவுன் னடைக்கலமே. (௧௧)

காக்கவுண் ணேக்க வுயிராத் திரனைக்கை யாட்சிசெய்யு
மாக்கவிண் சோதிக்கு மப்பா லொளிக்கு மருளொளிவே
நோக்குநர் நோக்குக்கெட் டாதவ னேபய னேய்பவந்தீ
ராக்க வழிக்கவல் லோயேயுன் பக்க லடைக்கலமே. (௧௨)

பொறிபுல னைக்கம டம்போ லடக்கிப் புகரகற்றிக்
குறிகுணங் கண்டத னட்பாம் பகுப்பைக் குறித்தயர்ந்த
வெறியினர் சின்னஞ் சிறுவரைப் போல வெறிதிருந்த
வறிஞ ருளத்தவி சேறிநின் றேயுன் னடைக்கலமே. (௧௩)

பொல்லாங் கொருவ ரெனக்கே செயினும் புகலரிய
நல்லாங் கொருவ ரெனக்கே செயினு நலமிகுந்த
வல்லாளர் போற்றினுங் கல்லார்க டூற்றினு மாட்சியுனை
யல்லாம லொன்று மறியேன் குத்தூஸுன் னடைக்கலமே. (௧௪)

வீடான சோதி வெளியே நிராமய வித்தகமெய்
யூடாடி னேர்க்க லாதமெய்ஞ் ஞானமு தூட்டுவிக்குங்
கோடானு கோடி யுயிர்த்திர ளோடு குலாவிநட
மாடாம லாடு றஹீமேயுன் பக்க லடைக்கலமே. (௧௫)

மூத்து வணமயி லாக வகுத்து முஹம்மதுவைச்
சித்து புருட ருயராத மாநபிச் சீர்வழியின்
வித்து மணியெனத் தந்துமெய் வேத விளக்களித்தா
யத்து விதப்பொரு ளேகாலிக் குன்ற னடைக்கலமே. (௧௬)

களவுற்ற நெஞ்சகக் கள்வனென் றுலுமுன் கண்யநிலை
பிளவுற் றகல்வ னெனிற்பிழை யேன்மிகு பேதையன்யா
னுளவுற் றறிய நினதா ரருள்வரி னேபிழைப்பே
னளவற்ற காரண றஸ்ஸாக்குன் பக்க லடைக்கலமே. (௧௭)

முடக்கிக் கிடக்கினு மெய்ஞ்ஞானச் சோதியின் முங்குகினு
நடக்கத் தொடங்கினு மௌனுதி காரத்தை நண்ணுகினு
மடக்கத் தொடங்கினு முற்று ரழவுயி ரற்றொடுங்கி
யடக்கிக் கிடக்கினுஞ் ஜாமீஹுன் பக்க லடைக்கலமே. (௧௮)

கண்டார் நகைத்திட மேலோர் முறையைக் கடைப்பிடியா
தொண்டா பரப்பத மேயடை யாதொரு வித்திரிந்து
சண்டாள னென்ற பெயர்படைத் தோருற வைத்தவிர்த்தா
ளண்டார் பகையறுத் தாளுஞ் ஜலீலுன் னடைக்கலமே. (௧௯)

வீதிக்கு வீதி திரிந்தலைந் தேயருள் வீடடைந்து
சாதிக்க நேர்மை யறியாத பையலைத் தண்ணருட்பா
வோதிக் கதியடை யச்செய்ய வேண்டு மொருபொருளா
மாதிக்க மான அஸீஸேயுன் பக்க லடைக்கலமே. (௨௰)

கொடியோர் செயும்பிழை யாவும் பொறுக்குங் குணக்கடலே
படியோர்க் கிரணம் பகுத்தூட்டு கின்ற பகாப்பயனே
மிடியோர் மிடியை யகற்றிடும் வேத விழுப்பொருளே
யடியோர் தமைக்காத் தருளு முஹீத்துன் னடைக்கலமே. (௨௧)

சாங்கால மென்னகத் துட்பவ மான சழக்கமற்றுத்
தீங்கான வெப்ப மறக்கலி மாவின் றிருப்புனலைப்
பாங்கா வெனுவி னடத்தியுன் போதப் பதிதருவா
யாங்கார மற்றமுத் தக்கப் பிறுவுன் னடைக்கலமே. (௨௨)

மடங்காத மன்னரை யெல்லா மடக்கும் வலிமையுள்ள
திடங்காணும் வேதத் தியல்காட்டுந் தூய திருவுருவே
சடங்காட்டு மாயை யுருதருள் வாயுளத் தன்மையினுக்
கடங்கா முஸவ்விறு வேயடி யேனுன் னடைக்கலமே. (௨௩)

காயா புரியெனுங் கோட்டையு முள்ளக் கருத்தனையு
மாயா விகார மெனும்பா தகன்வந்து வாதுசெய்யத்
தீயா மதிற்புழு வேபோ லுழன்ற சிதடனெனக்
காயாகி நின்றருள் வாய்பாஸித் துன்ற னடைக்கலமே. (௨௪)

காலமெல் லாமுன்றன் மீதே நிலைக்குங் கருத்துணர்ந்து
தூலமெல் லாமன்பின் மூலம தாகத் தொழுமடியேன்
சீலமெல் லாந்தர வேண்டுமிப் பாவி செறிந்திலங்கும்
ஆலமெல் லாஞ்சிறந் தோங்கும் மஜீதுன் னடைக்லமே. (௨௫)



நாவுக் கடங்காப் புகழ்க்குடை யோயுன் னைந்தனையார்
கோவுக் குணர்ந்து புலப்படு மாரதைக் கூறவொண்ணு
பாவிக்கு நன்மைப் பலந்தரு வாயுடல் பற்றுமிய
லாவிக் கினிய ஸலாமேயுன் பக்க லடைக்கலமே. (௨௬)

மக்கத் துதித்து மதினப் புரந்த முஹம்மதெங்கோன்
பக்கத் திருக்க வருள்புரி வாய்கொடும் பாவியெனைத்
துக்கத் திருக்கவைத் தாயெனி லோபயந் தோற்றகிலே
னக்கத் திருந்தியல் ஹாபிலு வேயுன் னடைக்கலமே. (௨௭)

வேசைப் பகட்டுள பொல்லாத பெண்களை விட்டுலகிற்
காசைப் பணத்தைப் பெரும்பொரு ளென்று கணித்துணரா
தோசைப் பொருட்கலி மாநிலை தேர வுணர்வினைத்தந்
தாசைப் பசாசைத் துரத்து ஸமீஹுன் னடைக்கலமே. (௨௮)

பம்பரம் போலக் கிறுகிறென் றுட்டும் பவத்திபுலீ
சம்பரம் போற்கணன் வந்தணு காம லருள்புரிவா
யிம்பரிற் சோதி யெவராலுங் காணற் கெளிதலவிண்
ணம்பர மேவிய வாஹிதுன் பக்க னடைக்கலமே. (௨௯)

வில்லினம் பைத்தொடுத் தெய்தாலெவ் வாறு விரைமதுபோற்
சொல்லினன் பைத்தொடுத் துய்மாறு வேண்டித் துதிக்குகின்றே
னல்லினு மாய பகலினு முன்ற னருள்புரிவா
யல்லலி லாதர சாளு முஇஸ்ஸு னடைக்கலமே. (௩௰)

சிரசளித் தாயுனை யேவணங் கச்சிதஞ் சிந்திக்கவாய்
பரசக் கொடுத்தனை யேயிருந் தும்முனைப் பாருலகிற்
பிரசக் கவிகொண்டு வாழ்த்தா திருந்தனன் பேதைமையா
னரசுக் குரித்துள வக்கீலுன் பக்க லடைக்கலமே. (௩௧)

இழுக்குக் குடைய செயலாளர் தங்களி னிஷ்டமுற்ற
வழுக்குக் குணமுடை யேனெனை நல்லருண் மாட்சிமையா
மொழுக்கத் திருக்க வரந்தரு வாயினை யொன்றுமின்றி
யழுக்கற் றிருக்கும் அலீமுன் ஹலீமுன் னடைக்கலமே. (௩௨)

உள்ளத்தி லேநித மூறிய பாசவெவ் வூத்தையினூற்
கள்ளக் கருத்தைச் சுமந்தே யலைந்த கருத்தனெற்கு
வெள்ளத் திருக்கரு ணைப்போக ஞானம் மிகக்கொடுத்துன்
னள்ளற் புறத்து விழாதாள் ஸமதுன் னடைக்கலமே. (௩௩)

கவசம் புனைந்து கலைப்பாகை சூட்டிக் கவிகுமென்னைத்
திவசமெல் லாமலைந் தேபாடி வினைரைச் சேருவனோ
துவசத் ததிபர் மூவரும்மநின் பாதத் துவிதமரு
ளவசமில் லாதழுக் கத்திமு வேயுன் னடைக்கலமே. (௫௪)

பொல்லாத பாவி யெனைப்போல்வர் யார்பெரும் பூதலத்தி
னெல்லா முனையன்றி யாவதுண் டோவவ் வெண்ணகிலே
னுல்லாச மும்பகட் டும்போக நல்லரு ளூட்டுகிற்பாய்
அல்லாகு ளாகிறு பாத்தினு வேயுன் னடைக்கலமே. (௫௫)

நிலவலத் தகுந்த றகுமானுன் போதத்தி னேன்புனைந்துச்
சவலப் படாதவர் தியேழு மானவர் சரதமன்றே
அவலப் பெரியர் செயற்றொட ராப்பெருங் காதகன்யா
னவலப் படாதருள் வாய்முன் தஹிமுன் னடைக்கலமே. (௫௬)

காந்தி செறிந்த மணிமாட மேம்பல காட்சிகொண்ட
வேந்தரெல் லார்க்கு மொருவேந்த ஞக விளங்குமருட்
சாந்தமிக் கானவ பேதைய னெற்குளச் சஞ்சலமா
மாந்திர வேலை துணைகா திறுவுன் னடைக்கலமே. (௫௭)

வம்புக்கு ளான மடையர்க்கு மோன மதிகொடுத்து
நம்புக்கு ளாக்கிடு நாதாந்த சோதி நடுவுநிலைத்
தம்பத்து ளாடிடக் கும்பத்து ளேயொளி தந்தருள்வா
யம்பத்து ளான ஹமீதேயுன் பக்க லடைக்கலமே. (௫௮)

பிண்டத்தி னுள்ளு மிடரணு காது பிறங்குமுயிர்ப்
பண்டத்தை யுங்கொடுத் தேயமு தூட்டிய பாமுதலே
துண்டத்தின் மத்தியி வின்றுடுஞ் சூத்திரந் தோற்றுவிப்பா
யண்டத் தினுக்குமப் பாலாங் கரிமுன் னடைக்கலமே. (௫௯)

பொழியாம லேபொழி யுங்கரு ணைகரப் பொன்முகிலே
பழியான தென்று மணுகாத பேரின்பப் பானலத்தின்
வழியான தேங்கட லேதவத் தோர்கண் மனத்துறைந்த
வழியாத வாஹிது வேயடி யேனுன் னடைக்கலமே. (௬௰)

சூழலழ கார்ந்த விளங்கன் னியர்பவக் கோதினிலே
யுழல மகாதவ மேபழு தாகி யுயர்ந்தநிழற்
கழல விடாதொரு மைப்பட ஞானக் கதியுதவி
யழலணு காதபடியாள் வதூதுன் னடைக்கலமே. (௬௧)



நீசக லத்தினு மேநிறைந் தாயதை நெஞ்சிலுணர்ந்
தேசக லத்தினு நானுனை யேதினந் தேடுகின்றேன்
பாசக லத்தினு மாபரி சுத்தப் பரும்பொருடந்
தாசக லத்தின மேஅவ் வலுவுன் னடைக்கலமே. (௬௨)

சகமுழு தும்படைத் தாயதன் மேற்பல சந்துகளைச்
சுகமுட னேயுல வித்திரி யும்படித் தோன்றவைத்தா
யகமுல வுங்கரு ணைகர ஞான மளித்தருள்வாய்
அஹதுஹ தானலத்தீபே பயலுன் னடைக்கலமே. (௬௩)

கெஞ்சாத நெஞ்சிருந் தென்னவுன் போதக் கெதிதருமப்
பஞ்சாக் கரம்பக ராவா யிருந்தென்ன பார்வையினுன்
மிஞ்சா திருந்த வகைக்கண்ணி னுமென்ன வேறெனைக்கு
மஞ்சாத மாலிக்குல் முல்க்கே தினமுன் னடைக்கலமே. (௬௪)

பொருளென்ப யாவு மழிவ துறுதி புனிதமறைப்
பொருளென்ப தொன்றது மட்டழி யாதெனப் புத்திநெறி
யருளும் பெரியர்மு னஞ்சென் றருளை யடைந்திடச்செய்
யருளுங் கிருபை முமீத்நுஹைறு யுன்னுன் னடைக்கலமே. (௬௫)

நபிநாத ரான விறசூல் முஹம்மதை நாட்டமுற்றுச்
சுபமான வாழ்வை யடையும் படிக்குன் றெருமுகைநலந்
தபமா னதுபெற வேபாவி கல்பினிற் றண்ணருளா
லபிஷேக மேபொழி வாய்ஆ கிறுவுன் னடைக்கலமே. (௬௬)

மூசலுடும் பொட்டை பரிபல வும்பகர் முத்திறசூல்
நிசமறை யான தறியா துழல்கின்ற நீசமட்டி
யசடரைப் பாடிப் புகழா துனதா ரருள்சொலிக்கு
மசல மினாநீலை தாமுஹி ஸித்துன் னடைக்கலமே. (௬௭)

தானந் தவமிவை யில்லானை யேனித் தரணியிலே
யீனத் தரும்படி நீபடைத் தாய்விழ லேதறியேன்
ஞானந் தனக்குமெட் டாதவ னேயுனை ஞானறிய
வானந்த மோன மருள்பாஸி றேயுன் னடைக்கலமே. (௬௮)

திருவுரு வான கனியாய்ப் பழுத்துச் செகமுழுதுங்
கருவுரு வான வுஜூதா யெவைக்குங் கருப்பொருளாய்
மருவுரு வான மணமாய் மணக்கு மவுனநிலைக்
கருவுரு வானயா தல்ஜலா லியுன் னடைக்கலமே. (௬௯)

மாதிரம் வேலா வலயமெல் லாமொரு மாத்திரைக்கு
ளேதிர மாகப் படைத்தழிப் பாய்பய லென்னுமப்துல்க்
காதிறு வாண னெனக்குன தாரருட் காட்சியரு
ளாதியு மந்தமு மான ஸபூறுன் னடைக்கலமே. (ருய)

அடைக்கலமாலை, முற்றிற்று.


ARULVAKKI
அருள்வாக்கி
புக் வென்சர்
bookventure


அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவரவர்கள் இயற்றிய பிரபந்தப்புஞ்சம் என்னும் கவித்தொகை ஹிஜ்ரி 1319 ஆம் ஆண்டு முஹற்றம் மாதத்திலே வெளிவந்தது. இத்தொகை நூலில் அல்லா குத்தஆலாவின் பேரில் அடைக்கலமாலை, அகிலரட்சக நபிகள் பெருமான் பேரில் முனாஜாத்து, நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மீது எண்கலை வண்ணம், முகியித்தீன் அப்துல் காதிறு ஜீலானி நாயகர் பேரில் எண்கலை வன்மெல்லிசை வண்ணம், கண்டிப்பதிற்றுப் பத்தந்தாதி, அருண்மணிமாலை ஆகிய அருள்வாக்கியின் ஐந்து கவிதை நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

ஈழத்துத் தமிழ்க் கவி வளத்தின் மூத்த முஸ்லிம் புலவராகவும், மலையகப் புலமையின் விடிவெள்ளியாகவும் திகழ்ந்த அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் இயற்றிய நூல்கள் பலவும் கிடைப்பது தற்காலத்திலே மிகவும் அரிதாகிவிட்டது. இதன் காரணமாக அவருடைய கவிதா ஆற்றல் பற்றிய சுவை நம் சமகாலத்து சந்ததியார் மத்தியிலே உரிய முறையிற் பரம்பவில்லை.

இந்த அவலத்தைப் போக்கி, இந்த இஸ்லாமியப் புலவரேறின் பேராற்றலைப் பிரகாசப்படுத்துவதற்காக 'அருள்வாக்கி புக் வென்சர்' என்ற ஒரு நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. அருள்வாக்கியின் நூல்களின் புதிய பதிப்புகளை வெளியிடுவதை இந்த நிறுவனம் தனது பிரதான பணியாக வரித்துள்ளது. இந்த நிறுவனத்தின் விருப்பத்திற்கு இணங்கவே அடைக்கலமாலை இளம்பிறையிலே பிரசுரமாகின்றது. அடைக்கலமாலை இளம்பிறை மறுபிரசுரத் திட்டத்தின் மூலம் வாசகருக்குக் கிடைக்கும்.

## காருண்யமுள்ள கலீபா

மூன்றாவது சிலுவை யுத்தம். மாவீரனான சுல்தான் சலாஹுத்தீன் முஸ்லிம் தானைக்குத் தலைமை தாங்கினார். அவர் போர் நுட்பத்துடன் ஏற்படுத்தி வைத்திருந்த பாதுகாப்பு அரண்களைத் தகர்த்தெறியும் மூர்க்கத்துடன் ஐரோப்பா எங்கணும் இருந்து கிறிஸ்தவப் படைகள் அலை அலையாக வந்து மூர்க்கமுடன் மோதலாயின. ஒரு யுத்தத்திலே வெற்றி. இன்னொரு யுத்தத்திலே தோல்வி. இத்தகைய ஒரு நிச்சயமற்ற நிலை. ஆனாலும், சுல்தான் சலாஹுத்தீன் அமைதியை இழக்காத நிதானத்தைக் கடைப்பிடித்தார்.

முஸ்லிம் படையின் வீரத்திற்கு முன்னர் ஜெரூஸலம் மண்டியிட்டுச் சரணடைந்தது. ஜெரூஸலவாசிகளுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கப்படலாகாது என்று தமது வீரர்களுக்கு சலாஹுத்தீன் கண்டிப்பான உத்தரவு இட்டார். அவர்கள் தங்களுடைய சொத்துக்களுடன் அமைதியான முறையிலே ஜெரூஸலத்தை விட்டு வெளியேறலாம் என்றும், ஆனால் மீட்புப் பணமாக ஒரு தொகையைச் செலுத்துதல் வேண்டும் என்றும் சுல்தான் சலாஹுத்தீன் உத்தரவிட்டார். மீட்புப் பணத்தினைச் செலுத்த 40 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டது. அதன் பின்

# இஸ்லாமிய
# வரலாற்றுக் கதைகள்

சற்றிலே கி.பி. 1187 ஆம் ஆண்டில் சுல்தான் சலாஹுத்தீன் ஜெரூஸல ராஜ்யத்திற்கு எதிராகத் தமது படையை வழிநடத்தினார். கடுமையான போர் நடைபெற்றது. ஜெரூஸலத்தைக் காப்பாற்றுவதற்காக கிறிஸ்தவப் படை பிடிவாதத்துடன் போராடியது ஆனாலும்,

னர் மீட்புப் பணம் செலுத்தாதவர்கள் அடிமைகளாவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஜெரூஸலத்திலிருந்து கிறிஸ்தவர்கள் வெளியேறத் தொடங்கினார்கள். கிறிஸ்தவ தானைத் தளபதியான பாபியன் இங்கிலாந்து மன்னனுடைய திரவியங்களை மீட்

புப் பணமாகச் செலுத்தி ஏழாயிரம் கிறிஸ்தவர்களுடன் வெளியேறினான். அதனைத் தொடர்ந்து சாரிசாரியாகக் கிறிஸ்தவக் குடும்பங்கள் வெளியேறின. இரக்க சிந்தையுள்ள எத்தனையோ கிறிஸ்தவர்கள் ஆயிரக்கணக்கான ஏழைக் கிறிஸ்தவர்களுக்கான மீட்புப் பணத்தைச் செலுத்தினார்கள். ஆனால், கிறிஸ்தவ மூதாளர் ஒழுக்க நெறியும் மனச்சாட்சியும் அறவே இல்லாதவர். தன்னுடைய பெருமளவு சேமிப்புகளையும், கோயில் சொத்துக்களையும் சுருட்டிக்கொண்டு புறப்பட்டார். அந்தக் கொள்ளையுடன் தப்பிச் செல்ல அவரை அனுமதிக்கலாகாது என்று சுல்தானின் தோழர்கள் சிலர் ஆலோசனை கூறினார்கள். ஆனால் சுல்தான், ''நான் கொடுத்த வாக்குறுதியை முறிக்கலாகாது,' என்று கூறினார்.

நாற்பது நாள்கள் கழிந்தன. இருப்பினும், ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் அந்த நகரத்திலே இருந்தார்கள். சக சமயத்தவர்களினாலே கைவிடப்பட்டு, அடிமைகளாகும் விதியை எதிர்நோக்கி நின்றார்கள்.

அப்பொழுது சலாஹுத்தீன் தம்பியான ஆதில் வந்து,' பிரபு! இந்த நகரத்தைக் கைப்பற்றுவதற்கு நானும் உதவி செய்துள்ளேன். இந்த நகரத்தின் ஏழைப் பிரஜைகளுள் ஆயிரம் அடிமைகளை இப்பொழுது தயவுசெய்து தாருங்கள்,'' என்று கேட்டார்.

''அவர்களைக் கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று சலாஹுத்தீன் கேட்டார்.

''என் இஷ்டம் போலச் செய்வேன்.'' என்று ஆதில் பதிலளித்தார்.

ஆதில் அந்த ஆயிரம் அடிமைகளையும் அல்லாஹ்வின் பேரிலே காணிக்கையாகச் சுதந்திர புருடர்களாகச் செல்ல அனுமதி வழங்கினார்.

பக்கத்திலே நின்ற இன்னும் இருவரும் அத்தகைய கோரிக்கைகளைச் சுல்தானிடம் கேட்டனர். அவ்வாறு பெற்ற இரண்டாயிரம் அடிமைகளை அவர்களும் சுதந்திரக் குடிமக்களாகச் செல்ல அனுமதி வழங்கினார்கள்.

''நண்பர்களே, இரக்க சிந்தையிலே இந்த உந்நத உள்ளங்களுக்குப் பின்னாலே நான் நிற்க அனுமதிப்பீர்களா? இந்த நகரிலுள்ள வயோதிபர்களும், அங்கவீனர்களும் சுதந்திரக் குடிமக்களாகச் செல்லலாம் என்று நமது காவலாளர்கள் பிரகடனப் படுத்தட்டும்,'' என அறிவித்தார்.

போர்க்களத்திலே வீழ்ந்து பட்ட அன்றேல் கைது செய்யப் பட்ட போர்வீரர்களின் மனையாள்களும் புத்திரிகளுமான ஏராளமான பெண்கள் அழுது புலம்பியபடி சுல்தானின் முன் தோன்றினார்கள். தங்களுக்குக் கருணை காட்டும்படி கெஞ்சினார்கள். அவர்களுடைய துயர் நிறைந்த சோகக் கதைகளைக் கேட்டதும் சுல்தானின் கண்கள் பனித்தன. போர்க்கைதிகளை விடுதலை செய்யும்படி பணித்தார். விதவை நிலை அடைந்துள்ள பெண்களுக்குத் தன் சொந்த நிதியிலிருந்து பொருளுதவி வழங்கினார்.

இத்தகைய ஒரு தாராள மனப்பான்மையுடன் சுல்தான் சலாஹுத்தீன் நடந்து கொண்டார்.

எண்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1099 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது சிலுவை யுத்தத்தின் போது, கிறிஸ்தவப் போர்வீரர்கள், பிணக்குவியல்கள் கிடந்த வீதிகளிலே வெறி கொண்டு நடமாடி, பாதுகாத்துக் கொள்ள இயலாத முஸ்லிம்களைச் சித்திரவதை செய்து கொன்றனர். அவ்வாறு மனிதாபிமானமற்று நடந்து கொண்ட பகைவர்களுடைய சந்ததியாரை சுல்தான் சலாஹுத்தீன் எத்தகைய மனிதாபிமானத்துடன் நடத்தினார்?

''சுல்தான் சலாஹுத்தீனைப் பற்றி ஜெருஸலத்தைக் கைப்பற்றிய நிகழ்ச்சி ஒன்று மட்டுமே கிடைப்பதாக இருந்தாலும், எந்தக் காலத்திலேயுமே சலாஹுத்தீனைப் போன்ற வீரமும் காருண்யமும் உள்ள ஒரு வெற்றி வீரன் வரலாற்றிலே தோன்றவில்லை என்பதை நிரூபிப்பதற்குப் போதுமானதாக இருக்கும்,'' என்று ஒரு கிறிஸ்தவ வரலாற்றாசிரியர் தமது தீர்ப்பினை வெளியிட்டுள்ளார். ★



---

*இரண்டாவது உமர் கலீபா அவர்களுடைய வாழ்க்கையில் சில சுவையான நிகழ்ச்சிகள்:*

## பதவியும் கலீபா உமரும்

டமஸ்கஸிலுள்ள பெரிய பள்ளி வாசலிலே இளவரசர்கள், அமைச்சர்கள், தளபதிகள், அமீர்கள் ஆகிய எல்லோருமே கூடியிருந்தார்கள். எல்லோர் முகத்திலும் ஒருவகையான ஆவல் உணர்ச்சி படர்ந்து காணப்பட்டது. காலஞ்சென்ற கலீபா சுலைமான் தமது வாரிசினை நியமித்த பத்திரத்தினை உறையிலிட்டு முத்திரையிட்டிருந்தார். அந்த உறையைப் பகிரங்கமாகத் திறந்து பார்ப்பதற்காகவே அவர்கள் கூடியிருந்தார்கள்.

இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரி அந்த உறையைத் திறந்து படித்து, இரண்டாவது உமர் கலீபாவாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார். அங்கு கூடியிருந்தவர்கள் சகலரும் இந்தச் செய்தியை ஆரவாரத்துடன் வரவேற்றார்கள். இந்த ஆரவாரத்தின் மத்தியிலும் இரண்டாம் உமர் மட்டும் மௌனமாகத் துக்கத்துடன் அமர்ந்திருந்தார். எல்லோரும் அவரையே அதிசயத்துடன் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

உமர் எழுந்து நின்று, ' நண்பர்களே, நான் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. நியமிக்கப்படத்தானும் இல்லை. என் பெயர் முன்மொழியப் பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்,'' என்றார்.

''உங்களுடைய நியமனத்தை நாம் எல்லோர் சார்பாகவும் நாங்கள் ஆதரிக்கின்றோம். நீங்களே நமது கலீபா ஆகுதல் வேண்டும்,'' என்று எல்லோரும் சத்தமிட்டனர்.

''உங்கள் எல்லோருக்கும் என் நன்றி. ஆனால், இந்த நியமனத்தை ஏற்கவோ, மறுக்கவோ எனக்குச் சுதந்திரம் இருக்கின்றது. பல லட்சக்கணக்கான மக்களுடைய சேமலாபங்களைப் பார்த்துக் கொள்ளும் பணி மிக மிகச் சிரமமானது. என்னைப் பார்க்கத் தகுதியான இன்னொருவரைத் தேர்ந்தெடுக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்,'' என உமர் மீண்டும் கூறினார்.

''உங்களிலும் பார்க்கத் தகுதியான வேறொருவர் இந்த சாம்ராஜ்யம் முழுவதிலும் இலர். இந்தச் சுமையைத் தங்களாலே சுமக்க முடியாவிட்டால், வேறு யார்தான் சுமக்கத் தகுதி உடையவர்?'' என அவையோர் மீண்டும் உற்சாகத்துடன் கூறினார்கள்.

''சரி நான் இந்தப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன். ஆனால், ஒரு நிபந்தனை, நான் சரியாக நடந்து கொள்ளும் பொழுது எனக்கு உங்கள் ஆதரவினைத் தர வேண்டும்; நான் குற்றங்கள் இழைக்கும் பொழுது அவற்றைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும்; தேவையேற்படும் பொழுது என்னை எதிர்ப்பதற்கும் தயங்கலாகாது,'' என்று உமர் கூறினார்.

''நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்றோம்; நாங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்றோம்,'' என்று அவையோர் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கூறினார்கள். அத்துடன், அக்கணமே விசுவாசப் பிரமாணமும் செய்து கொண்டார்கள்.

புதிய கலீபா அரச மாளிகையை நோக்கி நடந்தார். இரண்டு வரிசையிலே 12,000 போர் வீரர்கள் அணிவகுத்து நின்றார்கள். இதற்கான காரணத்தை வினவுவது போன்று அவர் தளபதியைப் பார்த்தார்.

தளபதி கலீபாவுக்குச் சலாம் கூறி, ''இவர்கள் அரசருடைய மெய்க்காவலர்,'' என்று விளக்கினார்.

''பிரஜைகளுடைய அன்பு என்னுடைய உடலைப் பாதுகாக்காது போனால், அதனை என்னுடைய போர்வீரர்களின் வாள் வலிமையினால் நான் பாதுகாத்துக் கொள்ள விரும்பவில்லை. சாம்ராஜ்யத்தின் எந்தப் பகுதியிலே குடிமக்கள் மத்தியிலே சமாதானத்தினை நிலை நாட்ட இவர்களுடைய சேவை மிக அதிகமாகத் தேவைப்படுமோ, அந்தப் பகுதிக்கு இந்தப் போர் வீரர்களை அனுப்பி வைக்கவும்,'' என்று கலீபா கூறினார்.



''அரசருடைய விருப்பம் நிறைவேற்றப்படும்?'' என்று தளபதி மீண்டும் சலாம் கூறினார்.

கலீபா அரண்மனைக்குள் நுழைந்தார். அங்கு 800 ஊழியர்களும் பணிப்பெண்களும் சலாம் கூறி, தலையைக் கவிழ்த்துக் கொண்டு நின்றார்கள்.

கலீபா அமைச்சரைப் பார்த்தார். சலாம் கூறிய அமைச்சர், ''இவர்கள் உங்களுடைய சேவைக்காக,'' என விளக்கினார்.

''எனக்கு என் மனைவியின் சேவை மட்டும் போதுமானது. இவர்கள் எங்கு செல்ல விரும்புகின்றார்களோ, அங்கே செல்வதற்கான சுதந்திரத்தை வழங்குகின்றேன்,'' என கலீபா பதிலளித்தார்.

## ஆபரணமும்

## கலீபா உமரும்

உமர் பின் அப்துல் அஸீஸ், கலீபா அப்துல் மாலிக்குடைய மகளான பாத்திமாவை மணந்திருந்தார். அப்பொழுது தந்தை தமது மகளுக்கு விலைமதிக்கவொண்ணாத ஆபரணத்தைப் பரிசளித்திருந்தார். ஆனால் உமர் கலீபாவாகப் பதவி ஏற்றதும் தமது அன்பு மனைவியை அழைத்து, ''உன் ஆபரணத்தைப் பொதுத் திறைசேரிக்குக் கொடுத்துவிடு; அன்றேல், என்னைப் பிரிந்து வாழும் துயரத்தை ஏற்றுக்கொள் நீயும் நானும் அந்த ஆபரணமும் ஒரே வீட்டிலேயே வசிப்பதை நான் விரும்பவில்லை,'' என்று கூறினார்.

''அந்த ஆபரணத்தைப் பார்க்கிலும் நீங்கள் எனக்கு எவ்வளவோ மதிப்பு வாய்ந்தவர்,'' என்று பாத்திமா பதிலளித்தார்.

அக்கணமே மேற்படி ஆபரணம் பொதுத் திறைசேரியிலே ஒப்படைக்கப்பட்டது.

## மேலங்கியும்

## கலீபா உமரும்

ஒரு வெள்ளிக்கிழமை மக்கள் முன்பாக கலீபா உமர் தொழுகையில் ஈடுபட்டிருந்தார். அவர் முன்னாலும் பின்னாலும் கிழிசல் தைக்கப்பட்டிருந்த மேலங்கியை அணிந்திருந்தார்.

தொழுகை முடிந்ததும் ஒருவன் கலீபாவை அணுகி, ''அல்லாஹ் உங்களுக்கு நிறையத் தந்திருக்கின்றான். அப்படியிருந்தும், ஏன் நீங்கள் கிழிந்த மேலங்கியை அணியவேண்டும்?'' என்று கேட்டான்.

''செல்வ நிலையிலும் எளிமை, அதிகார நிலையிலும் மன்னிக்கும் இயல்பு ஆகியன மிக உயர்ந்த பண்புகளாகும்,'' என கலீபா பதிலளித்தார்.

## பணியாளும்

### கலீபா உமறும்

முஸ்லிம்களுடைய பணிகளிலே ஈடுபட்டிருக்கும் பொழுது ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்திருப்பார். பொதுப்பணி முடிந்ததும், அதனை அணைத்துவிட்டு, தமது விளக்கினை ஏற்றுவார்.

ஒரு தடவை இப்னு ஹயாத் என்பவருடன் கலீபா உமர் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது விளக்கு மங்கிக்கொண்டிருந்தது. சற்றுத் தூரத்திலே பணியாள் படுத்திருந்தான்.

''தங்களுடைய ஊழியனை எழுப்பி விடட்டுமா?'' என்று ஹயாத் கேட்டார்.

''எவ்விதத் தொந்தரவும் இன்றி அவர் தூங்கட்டும்,'' என்று கலீபா பதிலளித்தார்.

''நான் எழுந்து உதவட்டுமா?' என்று ஹயாத் கேட்டார்.

''என் விருந்தினர் ஒருவருடைய சேவையைப் பெறுதல் நாகரீகமாகாது,'' என்று கூறிய கலீபா, தாமே எழுந்து சென்று, எண்ணெய் ஊற்றி விளக்கினைப் பிரகாசப்படுத்தினார்.

திரும்பும் பொழுது, ''நான் உமர் இப்னு அப்துல் அஸீஸாக எழுந்து சென்று, உமர் இப்னு அப்துல் அஸீஸாகவே திரும்பியுள்ளேன்,'' என்று அமைதியுடன் கூறினார்.

## ஈத்பெருநாளும்

### கலீபா உமறும்

இவ்வாறு பல இஸ்லாமிய நற்பண்புகளைப் பேணிச் சிறப்புடன் ஆட்சி புரிந்தார் இரண்டாவது உமர் கலீபா.

அவருடைய ஆட்சிக்காலத் காலத்திலே, ஒரு சமயம் ஈத் பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தப் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களிலே டமஸ்கஸ் வாசிகள் ஈடுபட்டிருந்தார்கள்.

கலீபா உமரிடம் அவருடைய அன்பு மனைவி பாத்திமா வந்தார். ''ஈத் பெருநாள் அண்மிக்கின்றது. பெருநாளுக்காகப் பிள்ளைகளுக்கு இரண்டு புதிய ஆடைகள் தைக்க வேண்டும்,'' என்று கூறினார்.

''எனக்குத் தெரியும். அதற்காக தான் என்ன செய்வது?'' என்று கலீபா கூறினார்.

''அமீர்களுடைய பிள்ளைகள் எல்லோரும் பெருநாளுக்காக மிகச் சிறப்பான ஆடைகளை அணிவார்கள். அப்பொழுது கலீபாவினுடைய பிள்ளைகள் தங்களுடைய அந்தஸ்துக்குப் பொருந்தக்கூடிய ஆடைகளை அணிய வேண்டாமா?''

''உன்னுடைய விருப்பத்தினை என்னால் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கின்றது. கலீபா என்ற என்னுடைய சேவைக்காக நான் நாளாந்தம் பெற்றுவரும் வேதனத்திலிருந்து புதிய ஆடைகள் வாங்க முடியாமல் இருக்கின்றதே.''

''அப்படியாயின் ஒரு வார வேதனத்தினை எனக்கு முற்பணமாகத் தாருங்கள். நான் அப்பணத்திலே புது ஆடைகள் வாங்கிய பின்னர், மிச்சம் பிடிப்பதின் மூலம் அந்தப் பணத்தைத் திருப்பித் தந்துவிடுகின்றேன்.''

''நான் இன்னும் ஒரு வாரம் உயிர் வாழுவேன் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஒரு வாரம் முடிவதற்கிடையில் மக்கள் என்னைப் பதவியிலிருந்து விரட்ட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? எங்களாலே திருப்பிச் செலுத்த இயலாத கடன்களைப் பெறுவதிலும் பார்க்க, ஆடம்பரத்தினை இழப்பது எவ்வளவோ மேலானது,'' என்று கலீபா உமர் மிக அமைதியாகவும் நிதானமாகவும் பதிலளித்தார்.




இளம்பிறை எம். ஏ. ரஹ்மான் எழுதிய
சிறுவர் இலக்கிய நூல்கள்

**இளமைப் பருவத்திலே!**

13 உலகப் பெரியார்களின் இளமைப் பருவத்தில் நிகழ்ந்த சுவையான சம்பவங்களின் தொகுப்பு. படங்களுடனும் வெண்பாக்களுடனும் கூடியது.

விலை: ரூ 1-25

**காந்தி போதனை**

காந்தி நேசித்த 13 பொருள்களின் சுய சரிதைகள். அவருடைய வாழ்க்கை பற்றிய 16 கதைகள். அவருடைய சர்வ சமய சமரஸ நோக்குப் பற்றிய விளக்கம். இவற்றுடன், அவரைப் பற்றிய பூரண வரலாறு. சித்திரங்களுடன் கூடியது.

விலை: ரூ 3-75

**இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலந் தொட்டு, மௌலானா அபுல் கலாம் ஆஸாத் வரையிலுமுள்ள இஸ்லாமிய வரலாற்றுப் பூங்காவிலே மலர்ந்த 40 அற்புத நிகழ்ச்சிகள் அடங்கிய கதைக் கோவை.

விலை. ரூ 1-90

# ரிஷி மூலம்

எஸ். பொ. வுடன் நான் நடத்தும் வழக்கமான இலக்கிய சமாக்களிலே, அன்று வ. அ. இராசரத்தினமும் கலந்து கொண்டார். எங்களுடைய பேச்சுப் பல விஷயங்களிலே தாவலாயிற்று. நடந்தேறிய குட்டித் தேர்தலைப் பற்றிய 'மரண விசாரணையிலே' நண்பர் வ. அ. இராசரத்தினம் வலு ஆர்வங் காட்டினர். அவர் பல காரணங்களை அடுக்கிய பொழுது, எஸ். பொ. குறுக்கிட்டார். ''முழு விவகாரத்தையும் 'ஒரு யானைக் கதை' மூலம் விளக்கலாம்,'' என்று கூறினர்.

இராசரத்தினமும் சளைத்தவரல்லர். ''நீங்கள் ஒரு யானைக் கதை மூலம் விளக்குவதை, என்னல் ஒரு பூனைக் கதை மூலம் விளக்க முடியும்'' என்றார்.


அடி மனத்திலே 'இளம்பிறை'யைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த எனக்கு வசதியான ஒரு சந்தர்ப்பம் வாய்ந்தது. நழுவ விடாமல் அதனைப் பாய்ந்து பிடித்தேன்.

' எஸ். பொ. சொல்லப்போகும் ஒரு யானைக் கதையும், வ. அ. சொல்லப் போகும் ஒரு பூனைக் கதையும் காற்றோடு கலந்து போவது இலக்கிய நஷ்டம். இருவரும் நாளைக்கே உங்களுடைய கதைகளை எழுதித் தாருங்கள். நான் அவற்றை இளம்பிறையிலே பிரசுரிக்கின்றேன். உங்களுடைய கதைகள் அச்சிலே வரும்பொழுது அவற்றிற்கு இலக்கிய அந்தஸ்து கிடைக்கவும் கூடுமல்லவா?'' என்று இருவர் தலையிலும் ஏக காலத்திலே 'ஐஸ்' வைத்தேன்.

நான் 'ஐஸ்' வைப்பதிலே அவர்கள் மசியக்கூடியவர்களல்லர். இருப்பினும், அன்பினை முன்வைத்து, அடுத்த நாளே இருவரும் இளம்பிறை அலுவலகத்தில் அமர்ந்து ஒரே மூச்சாக இவ்விரு கதைகளையும் எழுதித் தந்தார்கள்.

ரிஷி மூலத்தை அறியக்கூடாது என்பார்கள். ஆனல், இக்கதைகள் பற்றிய ரிஷி மூலத்தை ஒளித்து வைப்பதனல் யாருக்கும் லாபமில்லை. எனவேதான், இதனை எழுதினேன். வ. அ. இராசரத்தினம் 'நான் ஒரு வாக்காளனின் மனோநிலையைப் பிரதிபலிப்பதாகவே ஒரு பூனைக் கதையை எழுதினேன்,' என்று விளக்கினர்.





# ஒரு யானைக் கதை

**எஸ். பொ.**

நம் நாட்டிலே யானைகளின் தொகை அருகத் தொடங்கிற்று. இதைப் பற்றி விலங்குப் பிரியர்கள் வியாகூலம் அடையத் தொடங்கினர்கள். 'யானை பாதுகாப்பு இயக்கம்,' ஒன்றினை நிறுவி யானைகளைப் பாதுகாக்கும் பாரிய பிரச்சினையில் அரசு அசிரத்தையாக இருக்கின்றது என்று மூலை முடுக்குகள் எல்லாம் பிரசாரஞ் செய்தார்கள். அவர்களுடைய பிரசாரத்திற்கு முதலாளித்துவ பத்திரிகைகள் எக்கச்சக்கமான முக்கியத்துவம் கொடுத்தன. விவகாரம் சூடு பிடித்து, மக்கள் பிரச்சினை என்ற பூத உருவில் வளர்ந்தது. இதனல் அரசுக்கு மக்கள் மத்தியிலே அபகீர்த்தி ஏற்படுவதாயிற்று.

மக்கள் தொண்டையே மகேசன் தொண்டாகக் கருதும் அரசாங்கம் வாளா விருக்குமா? மந்திரிசபை அவசர அவசரமாகக் கூடியது. பிரச்சினையை விரிவாக ஆராய்ந்தது. 'யானைகள் காட்டிலே சுதந்திரமாக அலைந்து திரிவதினலே தான் வீணக அழிந்து போகின்றன,' என்ற உண்மையை மந்திரிசபை ஏற்றது. ''நம் நாட்டிலுள்ள யானைகள் எல்லாவற்றையும் பிடிக்க வேண்டும் அவற்றை ஒரு பாதுகாப்பான இடத்திலே வைத்து வளர்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் யானைகள் அழிந்து போவதைத் தவிர்க்கலாம். யானை பாதுகாப்புக் கூட்டுத் தாபனம் ஒன்றினை நிறுவி இந்தப் பணியினை அதனிடம் ஒப்படைக்கலாம்'' என்று உதவிப் பிரதமர் கூறிய ஆலோசனையை மந்திரி சபை ஏக மனதாக ஏற்றுக் கொண்டது.

''யானைகளைக் கட்டித் தீனி போடுதல் சாத்தியமா?'' என்று ஓர் அமைச்சர் ஐயம் தெரிவித்தார். (இவருடைய பெயரைத் தணிக்கை அதிகாரி வெளியிட மறுத்துவிட்டார். ஆனல், இந்த அமைச்சர் பிற்போக்கு அணியைச் சேர்ந்தவராகவே இருத்தல் வேண்டும் என்பது அரசாங்க அறிக்கையிலிருந்து சூசகமாகத் தெரிகின்றது.)

''மக்களுக்கே இலவச அரிசி கொடுக்கும் நம் நாட்டிலே, வாயில்லாச் சீவன்களான யானைகளுக்கு இலவச உணவு அளிப்பதைப் பெரிதுபடுத்த முடியாது. இப்படி யோசிப்பதே தவறு. நாம் பிரகடனப்படுத்தியுள்ள தர்மத்திற்கே இது முரணனது. மேலும், யானை பாதுகாப்புத் திட்டம், மக்களிடையே நமக்கு

யானைப் பலத்தை உருவாக்கித் தரும்'' என்று பிரதமர் உருக்கமாகப் பேசினார்.

''நமது பிரதமரின் காருண்ய உள்ளத்தை உலகமே அறியும். மிளகாய் தின்பதினால் நம் மக்களிடையே எத்தனையோ நோய்கள் பரவுகின்றன. எனவே, மிளகாய் இறக்குமதியை முற்றாகத் தடை செய்யலாம். நீரிழிவு வியாதிக்குச் சீனிப் பாவனையே காரணி. சீனி இறக்குமதியை நாம் முற்றாகத் தடை செய்வதினால், இன்னொரு நன்மையும் உண்டு. இன்சுலின் இறக்குமதியிலே, முஸ்லிம் பாவனையாளருக்குப் பன்றிப் புரதஞ் சேராத இன்சுலின் இறக்குமதி செய்ய வேண்டும் என்றெல்லாம் மண்டையைப் போட்டு உடைக்கத் தேவையில்லை. இந்த நடவடிக்கையாலே கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு யானைகளைப் பராமரிக்கலாம். ஆனால், யானைகளைப் பிடிப்பதிலே சிக்கனத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். இன்றைய நிலையில் அந்நியச் செலாவணியை விரயமாக்குதல் புத்தியன்று,'' என நிதி அமைச்சர் தெரிவித்தார்.

நம் நாட்டிலே வழக்கிலுள்ள யானை பிடிக்கும் முறைகள் மிகுந்த செலவினை ஏற்படுத்தும் என்பதை மந்திரிசபை ஒருமுகமாக ஏற்றுக் கொண்டது. இதற்கான திட்டத்தினைத் தயாரிக்க ரஷ்ய நிபுணர் சிறந்தவரா? அன்றேல் அமெரிக்க நிபுணர் சிறந்தவரா என்பது பற்றிக் கணிசமான அபிப்பிராய பேதம் நிலவியது. ஈற்றிலே, பிரதமரின் வேண்டுகோளின்படி அமெரிக்க நிபுணரை வரவழைப்பது என்று தீர்மானமாயிற்று.

*

**யானை**களைப் பிடிப்பதற்கு அமெரிக்க நிபுணர் விரிவான திட்டம் ஒன்றினைத் தயாரித்து முடித்தார். அவருடைய திட்டத்தினை ஆராய்வதற்கு மந்திரி சபையின் உபகுழு பிரதமரின் இல்லத்திலே கூடியது. இந்தக் கூட்டத்திற்குப் பத்திரிகை நிபுணர்கள் யாருமே அனுமதிக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்திலே அமெரிக்க நிபுணர் தம்முடைய திட்டத்தினை விளக்கத் தொடங்கினார்.

''யானைகளைப் பிடிப்பதற்கு இலங்கையிலே பயிலப்படும் வழிமுறைகள் மிகவும் பழைமையானவை. மேலும், அம்முறைகள் அரசாங்கத்திற்கு அதிக செலவினை உண்டாக்கும். சிக்கனமான, விஞ்ஞான ரீதியான யானை பிடிக்கும் முறை ஒன்றினையே சிபார்சு செய்ய விரும்புகின்றேன். இத்திட்டத்தின்படி ஐந்து கருவிகள் நமக்குத் தேவை,'' என்று கூறிய அமெரிக்க நிபுணர் அமைச்சர்களுடைய முகங்களைப் பார்த்தார். அவர்கள் தமது பேச்சினை உன்னிப்பாகக் கேட்பதை அறிந்து மகிழ்ந்தார்.



''முதலில் ஒரு நெஸ்பிரே டின் தேவை...'' என்று நிபுணர் ஆரம்பிக்கவும், ''நெஸ்பிரே டின்னா? அந்தப் பெயரை மக்கள் மறந்துவிட வேண்டும் என்று நாங்கள் பிரார்த்தனை செய்கின்றோம். நெஸ்பிரே டின்னை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணிக்கு நான் எங்கே செல்வேன்?'' என்று நிதி அமைச்சர் பிரலாபிக்கலானார்.

நிபுணர் முறுவலித்தார். ''நீங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள். இங்கு கிடைக்கும் மூல வளங்களைக் கருத்திலே கொண்டுதான் என் திட்டத்தினை நான் தயாரித்துள்ளேன். காலியான நெஸ்பிரே டின்கள்தான் தேவை. அவை நாடார் கடைகளிலே மலிவாகவும் ஏராளமாகவும் கிடைக்கும். அடுத்துத் தேவைப்படுவது வெண்கட்டி...'' ! என்று கூறிய நிபுணர் அமைச்சர்களைப் பார்த்தார். எவ்வித எதிர்ப்பும் எழவில்லை.

''மூன்றாவதாகக் கரும்பலகை தேவை,'' என்று நிபுணர் கணீரென்ற குரலிலே கூறினார்.

''யானைகளைப் பிடிப்பதை பாடசாலை லீவு காலத்திலே வைத்துக் கொண்டால், லட்சக் கணக்கான கரும்பலகைகளை என் அமைச்சு சப்ளை செய்யும். இல்லாவிட்டாலும் யப்பான் நாட்டிலிருந்து நன்கொடையாகக் கிடைத்துள்ள பத்தாயிரம் கரும்பலகைகள் அமைச்சிலேயே புத்தம் புதிதாக இருக்கின்றன. அவற்றை யானைகள் பிடிப்பு முயற்சிக்குத் தந்துதவலாம்,'' என்று கல்வி அமைச்சர் உத்ஸாகமாகக் கூறினார்.

அவருடைய கூற்றைக் கேட்ட பிரதமர் தமது கண்களைக் கல்வி அமைச்சர் மீது பதித்தார். பிரதமரின் கண்களிலே ஜொலித்த வினைக்குறியை ஒரு நொடியிலே புரிந்து கொண்ட கல்வி அமைச்சர், ''இந்தக் கரும்பலகைகளை எந்த விகிதத்திலே சிங்கள - முஸ்லிம் - தமிழ் மகா வித்தியாலயங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கல்விமான் குழு ஒன்றை ஆறு மாதங்களுக்கு முன்னர் நியமித்தேன். தங்களுடைய முடிவினைத் தெரிவிக்கக் கல்விமான்கள் குழு இன்னும் ஆறு மாத காலம் அவகாசம் கோரியுள்ளது. அந்தக் குழுவிற்கு ஆலோசனை கூற அடுத்த மாதம் அளவில் யப்பானிய நிபுணர் ஒருவர் வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது,'' என்று விளக்கினார்.

அர்த்த புஷ்டியான முறுவல் ஒன்று பிரதமரின் முகத்திலே தவழ்ந்தது. கூட்டத்திலும் மகிழ்ச்சிச் சூழல் ஒன்று விரிந்து படர்ந்தது.

''நான்காவதாகத் தேவைப்படும் கருவி சாவணம்...'' என்று அமெரிக்க நிபுணர் கூறித் தயங்கினார்.

''பொற் கொல்லர் சிறிய பவுண் துணிக்கைகளை எடுப்பதற்கு உபயோகிக்கும் சாவணம்

தானே?'' என்று நிதியமைச்சர் கேட்டார்.

அமெரிக்க நிபுணர், ''ஆம்!'' என்று தலையசைத்தார்.

''அது வலு சிம்பிள். செட்டித் தெருவிலுள்ள வர்த்தகர்களுள் யார் யார் அரசாங்கத்திற்கு நூறு நூறு சாவணங்கள் நன்கொடையாக வழங்குவார்களோ, அவர்களுக்கு வாச பேர்மிட் ஓர் ஆண்டுகாலம் நீடிக்கப்படுமென அறிவித்தால் போதும். ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்குச் சாவணங்கள் வந்து குவியும்,'' என்று நிதியமைச்சர் சட்டென்று ஆலோசனை கூறினார். நிதி அமைச்சரின் மதி நுட்பத்தை ஏனைய அமைச்சர்களும் மெச்சினார்கள்.

கூட்டத்திலே மௌனம் குடிகொண்டது.

''ஐந்தாவதும், மிக முக்கியமானதும் தொலைகாட்டி'' என்று நிபுணர் கூறியதும் அந்த அறையிலே மகாமசானப் பெருமௌனம் குடிகொண்டது.

''தொலைகாட்டிகளா? அந்நியச் செலாவணிக்கு எங்கே போவது? இந்த ஐயிட்டம் ஒன்றுக்காகவே இத்திட்டத்தைக் கைவிட நேரிடலாம்,'' என்று உதவிப் பிரதமர் கவலை தோய்ந்த குரலிலே கூறினார்.

''பயப்பட வேண்டாம். அமெரிக்க அரசாங்கத்துடன் நான் தொடர்பு கொண்டேன். தேவையான தொலைகாட்டிகளை எவ்வித நிபந்தனையுமின்றிக் கடனாகத் தந்துதவ அமெரிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது. இழந்து விட்ட நன்மதிப்பினை இந்நாட்டு மக்களிடமிருந்து மீண்டும் பெறுவதற்கு அமெரிக்க அரசு ஆவலாக உள்ளது. தேவைப்படும் தொலைகாட்டிகளை இங்கு கொண்டுவருவதற்கு ஏற்படுஞ் செலவுகளையும் அமெரிக்க அசராங்கம் ஏற்க முன்வந்துள்ளது,'' என நிபுணர் தெரிவித்தார்.

கூட்டத்திலே ஏகப்பட்ட மகிழ்ச்சி ஆரவாரம்.

''அது சரி, இந்தக் கருவிகளை வைத்துக் கொண்டு யானைகளை எப்படிப் பிடிப்பது? இத்திட்டத்தின் செயல் முறையைக் கூறுங்கள்'' என்று ஓர் அமைச்சர் கேட்டார். 'யானைகளைக் கட்டித் தினி போடுதல் சாத்தியமா?' என்று ஐயம் தெரிவித்த அதே அமைச்சரே இந்தக் கேள்வியையுங் கேட்டார் என்று ஊகிக்க இடமுண்டு.

அமெரிக்க நிபுணர் பிரதமரைப் பார்த்தார். 'நீங்கள் அந்தச் செயல் முறையைப் பயப்படாமற் கூறலாம். இங்கு நடைபெறும் எதுவுமே வெளி உலகிற்கு லீக் ஆகமாட்டாது' என்ற மெய்யைக் கூறுமற் கூறினார்.

நிபுணர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, திட்டத்தின் செயல் முறையைக் கூறத் தொடங்கினார்.

''யானைகள் நடமாடும் காட்டுக்குப் போய், அவை வழக்கமாக நடமாடும் தடங்களை அறிந்து கொள்ள வேண்டும். வசதியான இடமாகப் பார்த்துப் பரண் ஒன்றை அமைத்துக் கொள்ளலாம். பரணுக்கு முன்னால் உள்ள பெரிய மரம் ஒன்றில், யானைகளின் கண்களிலே சட்டென்று தென்படக்கூடிய உயரத்திலே கரும்பலகையைத் தொங்க விட வேண்டும். வெண்கட்டியை உபயோகித்து, அந்தக் கரும்பலகையிலே கணக்கு ஒன்று போட வேண்டும். உதாரணமாக ஒரு கூட்டற் கணக்கு. ஐந்து சக ஐந்து சமன் ஒன்பது என்று எழுதி வைக்கலாம்...''

''ஐந்து சக ஐந்து பத்தல்லவா?'' என்று நிதி அமைச்சர் முந்திரிக் கொட்டையாக முந்தினார்.

''பத்து என்பதுதான் சரியான விடை. யானை பிடிப்பு வேலையிலே ஈடுபட்டுள்ளோம் என்பதை நாம் மறந்து விடலாகாது...யானை பிடி ஒப்பரேட்டர் பரணிலே அமர்ந்திருக்கின்றார். அவர் முன்னால் தொலைநோக்காடி. விரல்களுக்கிடையில் சாவணம் இருக்கின்றது. யானைக்கூட்டம் ஒன்று அந்த வழியாலே வருகின்றது. யானைக் கூட்டத்தின் யூதபதி முன்னால் வந்து கொண்டிருக்கும். அதன் கண்களிலே கரும்பலகை தென்படும். கரும்பலகையை வாசித்ததுமே யூதபதிக்குச் சிரிப்பு வந்துவிடும். 'அடே இந்த மொக்கு மனிதனைப் பாரேன். ஐந்து சக ஐந்து ஒன்பது என்று எழுதி வைத்திருக்கின்றானே!' என்று கூறி, துதிக்கையை உயர்த்தி அட்டகாசமாகச் சிரிக்கத் தொடங்கும். யூதபதியைப் போலவே மற்றைய யானைகளும் சிரிக்கத் தொடங்கும். சிரிக்கும்பொழுது யானைகள் நிலைதளர்ந்துவிடும். – அப்பொழுது தொலைகாட்டியை முன் பின்னாகப் பிடித்துக் கொண்டு யானைக் கூட்டத்தைப் பார்க்கும்பொழுது, ஒவ்வொரு யானையும் மணற்குறுணி கணியம் தெரியும். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, யானைபிடி ஒப்பரேட்டர் சாவணத்தினால் ஒவ்வொரு யானையாகப் பிடித்து, நெஸ்பிரேடின்னிலே போட்டு அடைத்து விட வேண்டும்!'' என்று செயல் முறையை அமெரிக்க நிபுணர் விரிவாக விளக்கி முடித்தார்.

அந்த அறையிலே மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கி வழிந்தது. அமைச்சர்கள் சிரிப்பில் அலர்ந்த பற்களானார்கள்.

நன்றியுரை கூறுமாறு உதவிப் பிரதமர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

அவர் தமது உரையில், ''அமெரிக்க நிபுணர் இத்தகைய ஓர் அபூர்வ திட்டத்தைத் தயாரித்துத் தந்தமைக்காக நமது அரசு அவருக்கு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. எங்க



# ஒரு பூனைக் கதை

வ. அ. இராசரத்தினம்.

பூனையாருக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது.

மிளகாய்த்தூள் கலந்த காரக் கறியை விரும்பியுண்ணும் எசமானரிடம் வளர்ந்தது அந்தப் பூனை. உறைப்புக் கறிக்கும் சோற்றுக்கும் அதன் நா பழக்கப் பட்டுவிட்டது. ஆனால் கடந்த ஒருவாரமாக அதற்கு உறைப் புக்கறியே கிடைக்கவில்லை! காரக்கறி இல்லாமல் உள்ளே சென்ற உணவு சமிக்கவில்லை!

பூனையாருக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டுவந்தது.

எசமானர் தன் செல்லப் பூனையின் அவஸ்தையைக் கண்டார்! அதைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது அவருக்கு.

காரணம் அவருக்குத் தெரிந்தது தான்!

பூனைக்கு மட்டும் என்ன? மிளகாய் இல்லாதகறியைச் சாப்பிட்

---

னுடைய உண்மையான நன்றியைத் தெரிவிக்கும் முகமாக அவருக்கு ஒப்பந்தப் பணத்திற்குப் புறம்பாக ஓர் இலட்சம் ரூபா நன்கொடை வழங்க நமது அரசு முன்வருதல் வேண்டும். மேலும் இந்தத் திட்டம் பரம இரகசியமாக பாதுகாகக்கப்படுதல் வேண்டும். எதிர்வரும் மினித் தேர்தலுக்கு மூன்று நாள் முன்னதாக வானொலி மூலம் இத்திட்டத்தினை பிரதமர் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த யானை பிடிக்கும் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்திலே எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை அழுத்தி, அதனாலேற் படக்கூடிய நன்மைகளைத் தொகுத்துக் கூற வேண்டும்,'' எனக் குறிப்பிட்டார்.

அவருடைய உரை ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கூட்டம் முடிந்தது. அத் திட்டத்தின் வெற்றியைக் கொண்டாடும் விழா அந்த அறையிலே களைகட்டலாயிற்று. இருப்பினும், புதிதாக நிறுவப் படப்போகும் யானை பாதுகாப்புக் கூட்டுத்தாபனத்தின் பதவிகளிலே தமது இனியவர் யார் யாரைப் புகுத்தலாம் என்பது பற்றியே ஒவ்வொரு அமைச்சரும் தனித்தனியான அங்கலாய்ப்புச் சிந்தனையிலேயே ஈடுபடலாயினர்.

---



டதில் அவருக்கும் வயிற்றிலே கோளாறாகத்தான் இருந்தது.

ஏழெட்டு நாட்களுக்கு முன்னால்......அன்று மத்தியானம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அவர் மனைவியிடம் கேட்டார்.

''இன்றைக்குக் குழம்புக் கறியில்லையா?''

''இதை ஏன் என்னிடம் கேட்கிறீர்கள்? நீங்கள் வோட்டுப் போட்ட அரசாங்கத்திடம் கேளுங்கள்'' என்று எரிந்து விழுந்தாள் அவர் மனைவி.

''இன்னம் மூன்று மாதங்களிற் பார். ஊரெல்லாம் நம் நாட்டு மிளகாயாகவே இருக்கும்''

''அதுவரைக்கும் வெள்ளைக் கறிதான். அதுவும் பச்சை மிளகாயும் இல்லாமல், விருப்பமென்றாற் சாப்பிடுங்கள்'' என்று மீண்டும் சீறிய மனைவி அன்றிலிருந்து குழம்புக் கறியே சமைக்க வில்லை, அதன் காரணமாகத்தான் பூனையாருக்கு, ஏன் எசமானருக்கும் வயிற்றைக் குமட்டிக் கொண்டு வருகின்றது.

பூனையாரின் சங்கடத்தை அவதானித்த எசமானர் ''மித்ரா! பஞ்சதந்திர காலத்திலே உன் முன்னோன் ஒருவன், அவனுக்குப் புகலிடமளித்த கிழக் கழுகை ஏமாற்றிப் பறவைக் குஞ்சுகளைக் குதறினான். அந்தப் பாவத்தின் காரணமாகத்தான் இப்போது உனக்கு உறைப்புக் குழம்பு கிடைக்கவில்லை. ஆனால் அதையிட்டுக் கவலைப்படாதே. சில மாதங்களுக்குப் பொறுத்துக் கொள்! பின்னர் உள்ளூரிலேயே நமக்குத் தேவையான மிளகாய் உற்பத்தியாகிவிடும்''

தற்செயலாக அடுக்களையிலிருந்து வெளியே வந்த அவரது மனைவி, தன் கணவரின் உபதேசத்தில் ஆத்திரமடைந்தவளாய் ''மீனும் இறைச்சியும் என்ன விலை விக்குது. அதையும் தின்னாமத் தியாகம் பண்ணுங்கள். நாளைக்குப் பருப்புக்கறி மட்டுந்தான். அதையும் எப்ப நிப்பாட்டப் போறாங்களோ?'' என்று கர்ண கடூரமாக முழக்கிவிட்டு உள்ளே சென்றாள்.

தன் மனைவியின் பேச்சுக்குப் பதில் சொல்ல முடியாது தவித்த தன் எசமானரைப் பூனை ஆதுரத்தோடு பார்த்தது!

எசமானரும் பூனையை அன்போடு தடவிக் கொடுத்துக் கொண்டே ''கேட்டாயா அவள் சொன்னதை?' இனி உனக்கு மீனும் இறைச்சியும் கூடத்தர மாட்டாளாம். எப்படித்தான் வாழப் போகிறாயோ? எல்லாம் உன் முன்னோன் செய்த பாவத்தால் வந்த வினை'' என்றார் எசமானர்.

பூனை அவரிடம் அமைதியாகக் கேட்டது. ''நான் தான் என் முன்னோன் செய்த பாவத்தால் கஷ்டப்படுகிறேன். நீங்கள் யார் செய்த பாவத்திற்காகக்

கஷ்டப் படவேண்டும்? உங்களுக்கும் மீனும், இறைச்சியும் குழம்பும் கிடைக்காது தானே?''


''அதுவா? அதுவும் என் முன்னோன் செய்த பாவந்தான்! மிளகாயையே தெரியாத இந்த நாட்டிலே அதைப் பழக்கி வைத்த என் முன்னோன் செய்த பாவத்தினாற்தான் நான் கஷ்டப் படுகிறேன்'' என்றார் எசமானர்.

''இல்லை. உதட்டளவிற் சோஷலிஸம் பேசுபவர்களை நம்பியதுதான் நீங்கள் செய்த பாவம்'' என்று வெடுக் கென்று பதில் சொல்லிற்று பூனை!

திகைப்படைந்த எசமானர் சுதாரித்துக் கொண்டு ''இதை வெளிப்படையாகச் சொல்ல நானும் உன்னைப் போலப் பூனையாகப் பிறக்கவில்லையே, அதுவும் நான் செய்த பாவந்தான்'' என்று பெருமூச் செறிந்தார்.

*


பெருநாள் பரிசு!



இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

40 கதைகள்

முஹம்மது நபி (ஸல்)
அவர்கள் காலத்திலிருந்து
மௌலானா ஆஸாத்
வரை

மூவர்ண அழகிய
முகப்பு

விலை 1/90

இளம்பிறை
எம். ஏ. ரஹ்மான்
தொகுத்தவை

வீரகேசரி ஏஜண்டுகளிடம் வாங்கலாம்.


எஸ். பொ. அறிக்கை என்னும் நூல் இத் திருக்கடைக் காப்புடன் 31-10-72 இல் வெளியிடப்பட்டுள்ளது.

# திருக்கடைக் காப்பு

எம். ஏ. ரஹ்மான்

எஸ். பொ. அறிக்கை — அறுபது பக்கங்களிலே விரியும் முன்னீடு தவிர்ந்த அறிக்கை—சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அமைச்சர் மாண்புமிகு செ. குமாரசூரியர் தலைமையில் ஹோட்டல் சமுத்ராவில் நடைபெற்ற விழாவிலே அரங்கேற்றப்பட்டது. அதற்கு அடுத்த நாள் முன்னீடுடன் இணைந்த நூல்களை 'பைண்ட்' செய்து விற்பனை விநியோகத்திற்கு அனுப்பும் அலுவல்களை மேற்கொள்ளுமாறு என்னுடைய அச்சக ஊழியர்களைப் பணித்தேன்.

அருகில் நின்ற எஸ். பொ., 'ஏன் இவ்வளவு அவசரம்? என்னையும் என் அறிக்கையையும் சிறிது காலத்திற்கு ஊறுகாய் போட்டு வைப்பது சேமம்', என்றார்.

## ஊறுகாய் விவகாரம்

அரசு வெளியீடுவின் நூற் பிரசுரம் பொருளாதார ரீதியில் ஆதாயமானதல்ல. இலக்கிய நலனை நோக்காகவும், இலக்கியச் சத்தியத்தையும் தன்வம்பிக்கையையும் மூலதனமாகவும் கொண்டு அது நிறுவப்பட்டது. ஆனாலும், மூலதனம் இன்றி வியாபாரம் நடத்த முடியாதல்லவா? நூல்களைத் துரிதமாக விற்பனைக்கு விநியோகஞ் செய்வதின் மூலம், முடக்கப் பட்ட மூலதனத்தின் ஒரு சிறு பகுதியை மீட்டுக் கொள்ளுதல் சாத்தியம். இலக்கியத்தைத் தவிர்த்த பிற துறைகளைப் பற்றிச் சிந்திப்பதற்குத் தமது மூளையை அதிகம் கசக்கிக் கொள்ளாத எஸ். பொ. வுக்குக்கூட இந்த உண்மை தெரியும். முன்னீடுடன் கூடிய இந்நூல் விற்பனைக்கு வந்தாற்றான் அவருடைய கருத்துக்கள் மக்கள் மத்தியிலே செலாவணியாகும். தன்னுடைய கருத்துக்கள் மக்கள் மத்தியிலே பரம்புவதையே எந்த எழுத்தாளனும் விரும்புவான். அப்படி இருந்தும் எஸ். பொ. ஊறுகாய் விவ

காரத்தை நுழைத்ததும் எனக்குச் சுருதி பேதமாகத் தோன்றியது. தம்முடைய தளத்தினை நீண்ட விளக்கங்களுடன் நிறுவினர். இந்நூல் உங்கள் கையிலே கிடைக்கும் இத்தறுவாயில் அந்த விளக்கங்கள் தேவையற்றன என்பதை உன்னித் தவிர்க்கின்றேன்.

### இளம்பிறைப் பங்கு

இந்நூல் ஊறுகாய் போடப்பட்டது. ஆயினும், 69 ஆம் பக்கம் தொடங்கி, 86ஆம் பக்கத்துடன் முடிவடையும் அறிக்கை மாண்புமிகு செ. குமாரசூரியர் தலைமையிலே கூடிய சபையினருக்கு விநியோகிக்கப்பட்டது. அஃது இளம்பிறையிலே பிரசுரிக்கப்பட்டதின் மூலம் இலக்கியச் சுவைஞருள் ஒரு பகுதியினரையுஞ் சென்றடைந்தது. இருப்பினும், சிரத்தையிலே ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையிலே அது முன் வைக்கப்படவில்லை.

இப்பொழுதுதான் ஊறுகாய் போட்டு வைக்கப்பட்ட இந்நூல், இத் திருக்கடைக் காப்புடன் வெளிவருகின்றது. திருக்கடைக் காப்பினை எழுதுவதற்காக இந்நூலை எழுத்தெண்ணிப் படிக்க நேர்ந்தது.

### எதிர்காலக் கணிப்பு

இன்று அதிகாரத்திலுள்ள ஆட்சியின் அமைப்பினை ஆய்ந்து, எதிர்காலப் பாதிப்புகளை நினைவில் இருத்தி, நிதானமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி எஸ். பொ. ஆற்றுப்படுத்தினர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அவர் இந்த நூலுக்கான முன்னீட்டினை எழுதும் பொழுதே சேகுவேரா இயக்கத்தைப்பற்றியும் எச்சரிக்கை செய்தார். அவர் எச்சரித்த ஆறு மாதங்களுக்கிடையிலேயே சேகுவேரா இயக்கத்தினர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கிளர்ச்சி செய்தனர். இதனை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கின்றது. மூக்கு நுனி மட்டும் சிந்திப்பவர்களாலே தீர்க்கதரிசனமான திட்டங்களைத் தயாரிக்கவோ, செயற்படுத்தவோ இயலாது. ஊறுகாய்க்கு அவசரமும் இல்லை. தன்னலமும் இல்லை. ஆக்கினையைத் தவமாக ஏற்றது. எனவே, அதன் மதிப்பும் உயர்ந்துள்ளது.



### குழுவினர் அறிக்கை

அமைச்சர் மாண்புமிகு குமாரசூரியரினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினர், எஸ். பொ. அறிக்கையிலே காணப்படும் அம்சங்கள் சிலவற்றை வேறு வார்த்தைகளிலும், வகையிலும் மஃினப்படுத்தித் தமது அறிக்கையிலே இணைத்துள்ளனர். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை வெளிவந்து சுமார் இரண்டு ஆண்டுகளாகிவிட்ட போதிலும், ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சாதகமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? அந்த அறிக்கையை வாசித்த பின்னர், 'அறிக்கை முலாம் பூசப்பட்ட பித்தளை. இலக்கியச் சத்தியத்துடன் வனையப்படவில்லை. கல்லறைச் சிந்தனைகளே விரவிக்கிடக்கின்றன,' என்று எஸ். பொ. அபிப்பிராயப்பட்டார். ஒரு வேளை எஸ். பொ. அவ்வறிக்கையின் செயற்கைத் தன்மையை மிகைப்படுத்திக் கூறியிருக்கலாம் என்று அப்பொழுது எண்ணினேன். ஆனால், இப்பொழுது ஈழத்துத் தமிழ்ச் சுவைஞனுக்கு விடிந்துள்ள அவலநிலையைப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே வியாகூலம் நீடிக்கின்றது.

### சஞ்சிகையாளர் ஒன்றியம்

உள்ளூர்ச் சஞ்சிகைகள் சேமமுடன் வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும் என்ற சத்திய உணர்வு மாண்புமிகு குமாரசூரியரிடம் இருப்பது குளிர்வினைத் தருகின்றது. அவர் சஞ்சிகையாளர் மகாநாட்டினைக் கூட்டினர். அவர்களுக்கு உதவும் வகையிலே ஓர் அமைப்பு நிறுவப்படுதல் வேண்டுமென்று அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். அன்றைய மகாநாட்டிலே கலந்து கொண்ட கம்யூனிஸ்டுகளுடைய எண்ணிக்கை குறைவு. எனவே, அமைச்சருடைய வேண்டுகோளை நிராகரித்து, சஞ்சிகையாளருக்கான நிறுவனத்தைத் தோற்றுவிப்பதை . . இன்னொரு நாளுக்கு ஒத்திப்போடுவதிலே ஒரு சிலர் முனைப்புக் காட்டினர்கள். ஆனல் இளம்பிறை மாசிகையின் இணை ஆசிரியர் என்ற கோதாவிலே கலந்து கொண்ட எஸ். பொ. அமைச்சருடைய சிந்தனைத் தடத்தினைப் புரிந்துகொண்டு, 'சஞ்சிகையாளர் ஒன்றியம்' என்ற நிறுவனத்தைத் தோற்றுவிக்கும்படி பிரேரித்தார். பெயர்கூட அவர் சூட்டியதுதான்.

உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது. நான் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

## ஆலோசகர் நுழைவு

ஒன்றியத்திற்குப் பெயர் சூட்டி, அதற்கு ஒரு யாப்புத் தயாரிப்பதிலே உதவியதுடன் எஸ். பொ. அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். ஒரு சந்தர்ப்பத்திலே ஒன்றிய விவகாரங்களைப் பற்றிய கதை எழுந்த போது, ''பொருளாளரான நீங்கள் செயற்குழுக் கூட்டங்களிலே தூங்கிக் கொண்டா இருக்கின்றீர்கள்? சஞ்சிகை வெளியீட்டுடன் சம்பந்தமில்லாதவர் ஏன செயற்குழு உறுப்பினராக்கப்பட்டனர்? சாதாரண அங்கத்துவ பதவிகூட இல்லாதவர்களுக்கு செயற்குழுவிலே இடம் அளிக்கலாமா? பொதுச்சபை புதிய செயற் குழு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தைத் தந்ததா? இது ஜனநாயக சம்பிரதாயங்களுக்குப் பிறழ்வானது. கம்யூனிஸ லேபலுடன் வலம் வருவோருடைய கை ஓங்கியிருக்கின்றது. இனி ஒன்றியம் உருப்பட்டது போலத்தான், இருந்து பாருங்கள். ஒன்றியத்தின் வரலாறு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகத்தான் இருக்கும்'' என்று காரசாரமாகக் கூறினார். ஆனாலும், என் தளத்திலிருந்து நோக்குகையில் அவர்களுடைய ஆலோசனைகள் ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு உதவும் என நம்பினேன்.

ஆனால், ஒன்றியம் துடிப்புடன் இயங்க வில்லை; உண்மையான சஞ்சிகையாளர் அதனைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றார்கள் என்ற நிதர்சனத்தை நினைத்து அதன் பொருளாளர் என்ற கோதாவில் மனசாரத் துக்கப்படுகின்றேன்.

## கலைக்கோலம்

தென்னிந்திய சஞ்சிகைகள் மீது கட்டுப்பாடு கொண்டு வருவது சம்பந்தமாகப் பல வகையான அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டன. இலக்கிய வளர்ச்சியிலே சினிமாவும் வானொலியும் கொண்டுள்ள பங்களிப்பினை முதன் முதலில் எஸ். பொ. அறிக்கையே பிரஸ்தாபித்தது. வானொலி மூலம் இலக்கிய விழிப்புக்கு வித்திடும் ஒரு சிறிய வாய்ப்பு எஸ். பொ. வுக்குக் கிடைத்தது. இலங்கை வானொலியின் கலைக்கோல நிகழ்ச்சிகள் சிலவற்றை நடத்தும்படி எஸ் பொ. கேட்டுக் கொள்ளப்பட்டார். மொத்தம் ஆறு நிகழ்ச்சிகளை நடத்தினார். அவருடைய நிகழ்ச்சிகளிலே புதிய குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. மலையக இலக்கிய ஆற்றல்களுக்கும், முஸ்லிம் எழுத்து முனைப்புகளுக்கும் அவர் கணிசமாக இடம் கொடுத்தார். கிழக்கு மாகாணத்துக் கலை - இலக்கிய முயற்சிகளையுஞ் சிரத்தையிற் கொண்டார். பெண் எழுத்தாளர்களையும் ஊக்குவித்தார். ''ரகு! என்னுடைய கலைக்கோல நிகழ்ச்சிகளிலே ஒருவருக்கு ஒரேயொரு முறைதான் சந்தர்ப்பம் அளிப்பேன். அப்படியொரு கொள்கையை எடுத்துக் கொண்டாற்றான் எல்லோருக்கும் வாய்ப்பளிப்பது சாத்தியமாகும். புதிய ஆற்றல்களுக்குத் தாராளமாக இடம் கொடுக்க வேண்டும். கொள்கையிலே மாறுபட்டவர்களுடைய கருத்துக்களுக்கும் இடம் கொடுப்பேன். கருத்து மோதுதல்கள் சங்கையானது. அதன் மூலம் உண்மைத் தரிசனம் கிடைக்கும்,'' என்று எஸ். பொ. என்னிடங் கூறுவார். கலைக்கோல நிகழ்ச்சிகளிலே கருத்துக்கோலம் என்ற கனதியான இலக்கிய அம்சம் ஒன்றினை வகுத்தார். அப்பகுதியிலே சிவத்தம்பி உட்படப் பல கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களுடைய கருத்துக்களை ஒலிபரப்புவதற்கு வசதி செய்தார். ''கருத்துக் கோலத்திலே கருத்துத் தெரிவிக்கும்படி கைலாசபதியையுங் கேட்டேன். அவர் பங்கு பற்ற விரும்பவில்லை. படித்தவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் இப்படி ஒரு குறுகல் மனப்பான்மையுடன் சாம்பக் கூடாது,'' என்று எஸ். பொ. வருத்தப்பட்டார். அவர் கலைக்கோல நிகழ்ச்சிகளை, மிகுந்த எல்லைக்கட்டுடைய சுயேச்சையுடன் நடத்திய போதிலும், இலக்கிய அரங்கிலே இலக்கிய சத்தியம் எவ்வாறு பேணப்படலாம் என்பதை வரையறுப்பது போல அவர் நிகழ்ச்சிகளை நடத்தினார்.

## மஜீத் திட்டம்

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் தகவல் - ஒலிபரப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் இலக்கிய வளர்ச்சி கருதியும் சில நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட வேண்டும் என்பதிலே அக்கறை காட்டினார். அவர் என்னுடன் இது குறித்து உரையாடும்

பொழுது, கலை - இலக்கிய நண்பர்கள் கூட்டத்திலே தினம் ஒரு கோலமாக, வானவில் போல, ஏழு இலக்கியக் கோலங்கள் ஒலிபரப்பப்படலாம் என்று நான் பேசியதையும் குறிப்பிட்டேன். இவ்வாறு அமைச்சர் மஜீத் பல இலக்கிய அபிமானிகளுடன் வெகு அக்கறையாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார் எனப் பின்னர் அறியலானேன்.

### நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டது!

பிரதி அமைச்சர் தமது 'மஜீத் திட்ட'த்தினை வெளியிட்டார். தற்போதைய கலைக்கோல நிகழ்ச்சிகள் வழக்கம்போல நடைபெறலாம் என்றும், திங்கள் தோறும் இலக்கிய அரங்கும், செவ்வாய் தோறும் மக்கள் அரங்கும், புதன் தோறும் நாடக அரங்கும், வியாழன் தோறும் கவிதை அரங்கும், வெள்ளி தோறும் கதை அரங்கும், சனிதோறும் எழுத்துலக ஒன்றிய அரங்கும் ஒலிபரப்பப்படுதல் வேண்டும் என்பதை மஜீத் திட்டம் பிரதான அம்சங்களாகக் கொண்டிருந்தது. மஜீத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கான நேரமும் பணமும் ஒதுக்கப்பட்டது. அத்திட்டத்திற்கு இசைவாக, முதன் மூன்று மாதங்களுக்கான விரிவான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பொறுப்பு எஸ். பொ. விடம் அளிக்கப்பட்டது. அவர் பல நாள்களாகச் சிந்தித்து, பிரதி அமைச்சருடனும் வானொலி அதிகாரிகளுடனும் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தி, நிகழ்ச்சி நிரலினைத் தயாரித்தார். ஈழத்தின் சகல பிராந்தியங்களுக்கும், சகல பகுதியினருக்கும் சம சந்தர்ப்பம் அளித்து நிகழ்ச்சி நிரலை முழுமையாக்கினார். யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு - மலையகம் - மன்னார் ஆகிய பகுதிகளுக்கு நேரிலே சென்று ஒலிப்பதிவு செய்து வரவும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஏழு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்களையும் நேரில் அழைத்து, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைகளின் தலைவர் நிகழ்ச்சி நிரலை சம்பிரதாய பூர்வமாக கை அளித்து, அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து அவற்றைத் தயாரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

### புதிய ஆலோசனைக் குழு

'மஜீத் திட்டம்' செயற்படும் தறுவாயிலே கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களுடைய ஆதிக்கம் ஓங்கிய



ஆலோசனை சபை ஒன்று திடீரென அமைக்கப்பட்டது. இந்தச் சபை அமைக்கப்படுவதை மாண்புமிகு செ. குமாரசூரியர் சிபார்சு செய்ததாகப் பிரஸ்தாபம். அவருக்கும் வானொலி நிகழ்ச்சிகளைத் தரப்படுத்துவதிலே நியாயமான அக்கறை இருக்கின்றது. இலக்கிய வளர்ச்சி கருதி வகுக்கப்பட்ட மஜீத் திட்டத்தை நிராகரிப்பதற்கு, குமாரசூரியர் விரும்பியிருக்கமாட்டார். ஆனால், ஆலோசனைக் குழுவினர் எஸ்.பொ. தயாரித்த நிகழ்ச்சி நிரலிலே சில பகுதிகளை தங்கள் வருவாய்க்குச் சாதகமாகக் கல்லியெடுத்துக் கொண்டு மிகுதியைக் குப்பைத் தொட்டியிலே வீசிவிட்டார்கள். பொதுவான இலக்கியப் பணிகளிலே எல்லா அணியினரும் இணைந்து செயலாற்றுதல் வேண்டும் என்பதிலே எஸ்.பொ. மிகுந்த அக்கறை கொண்டவர். மாறாக, குறிப்பிட்ட ஒரு அணியினரின் வருவாயைப் பெருக்குவது மட்டும் ஆலோசனைக் குழுவின் நோக்கமாக இருக்கின்றது என ஊகிக்க இடமிருக்கிறது. இந்த நோக்கம் அமைச்சர் குமாரசூரியருக்கு இருக்க நியாயம் இல்லை என்பதை நான் சத்தியமாக நம்புகின்றேன். எஸ்.பொ. வின் எழுத்தாற்றலைக் கண்டு கைலாசபதியும் சிவத்தம்பியும் நடுங்குகின்றார்கள் என்பது எழுத்துலகின் வெகுநாளைய பிரஸ்தாபம். அவரவர் பயம் அவரவர் தர்மம். புதிய ஆலோசனைக் குழு எஸ். பொ. தயாரித்த நிகழ்ச்சி நிரலை நிராகரித்திருக்கலாம். ஆனால், மஜீத் திட்டத்தினை, தமக்குச் சாதகமாக அமையக்கூடிய நிகழ்ச்சி நிரல் ஒன்றினைத் தயாரித்துச் செயற்படுத்தி இருக்கலாம் அல்லவா? எஃது எவ்வாறிருப்பினும், மஜீத் திட்டம் இவ்வாறு தூக்கி எறியப்பட்டமை ஈழத்து இலக்கிய உலகிற்குச் சம்பவித்துள்ள பேரிழப்பாகும்.

### மாற்றுத் திட்டம் உண்டா?

இலக்கிய நலன் கருதி வகுக்கப்பட்ட திட்டத்தினை நிராகரித்த ஆலோசனைக் குழுவினர், மாற்றுத் திட்டம் ஒன்றினை வகுத்திருக்கலாம் அல்லவா? அப்படி எதுவும் இல்லை. வானொலி ஊழியர்கள் மத்தியிலும், வானொலி கேட்குநர் மத்தியிலும் பாரிய மனக்கசப்பினை வளர்க்கக்கூடிய சில அவசர நடவடிக்கைகளை எடுப்பதிலே மட்டுந்தான் ஆலோசனைச் சபை அக்கறை காட்டுவதாக பல பகுதியினரும் அபிப்பிராயந் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வானொலியில் அண்மைக் காலத்தில் நடத்தப்படும் 'கூத்து'களைப் பற்றி அதிகம் அதிகமாகக் கேள்விப்படும் பொழுது, கைலாசபதி சிவத்தம்பி போன்ற கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களைப்பற்றி ஒரு தடவை எஸ். பொ. விமர்சனஞ் செய்ததுதான் என் ஞாபகத்தில் மிதக்கின்றது;

## 'தொப்பைக் கொள்கையர்'

''இவர்களுடைய இலக்கியக் கொள்கை சுத்த சுயம்புவான தொப்பைக் கொள்கைதான். கற்பனை வளமும், ஆக்க இலக்கிய ஆற்றலும் இல்லாதபடியால், கல்லறைத் தத்துவங்களை வைத்து மாரடிக்க வேண்டியிருக்கிறது. வகுப்பறையிலே அறிமுகமாகும் விரிவுரைகள் சஞ்சிகைக் கட்டுரைகளாகவும், வானொலிப் பேச்சுகளாகவும், ஈற்றில் நூல்களாகவும்......எல்லாம் ரப்பர் இழுக்கும் வியாபாரந்தான். 'மக்களிடத்தில் கலாசாரம் - கல்வி - சமுதாய உணர்வு ஆகிய மட்டங்களிலே உயர்வு நாடி முன்னேறாத கம்யூனிஸத்தை நம்மாற் கற்பனை செய்து பார்க்க முடியாததாக இருக்கின்றது. பொருளியல் தொழில்நுட்ப அடிப்படைகளை நிராகரித்துக் கம்யூனிஸத்தை நினைத்துப் பார்க்க முடியாதது போன்றதுதான் இதுவும். இலக்கியமே சமுதாயத்தின் விழிகள். எனவே, விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சிகளினால் ஏற்படும் மாறுதல்களைத் தற்கால சோவியத் இலக்கியம் மிக நுணுக்கமாகப் பிரதிபலிக்கின்றது. ஆற்றல் இலக்கியங்களிலும், இலக்கிய விமர்சனத்திலும் இவை பிரதிபலிக்கப்படுகின்றன.' சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 ஆம் காங்கிரஸுக்குப் பின்னர் சோவியத் நாட்டின் இலக்கியக் கோலம் இவ்வாறு அமைந்துள்ளது. குருசேவ் புகுத்திய தாராள மனப்பாங்கிற்குப் பின்னர், சோவியத் இலக்கியத்திலே புதிய கோலம் முகிழ்ந்து வருகின்றது. இவற்றை எல்லாம் விளங்கிக் கொள்ளாது, 'ஸாகிரா மகாநாடு! ஸாகிரா மகாநாடு!' என்று பிலாக்கணம் வைப்பவர்களிடம் சிந்தனைத் தெளிவையோ, இலக்கிய நாணயத்தையோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? முந்திய தலைமுறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் பாரதிக்கு முற்பட்ட பாவலர்களை வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்தினார்கள். இவர்கள், பாரதிக்குப் பிற்பட்ட இலக்கியத்தை வைத்துக்கொண்டு கடை நடத்துகின்



றார்கள். இவர்களும் ஒரு வகையான பண்டிதர்களே. உயிர்ப்புள்ள மார்க்ஸிஸப் பார்வையை விடுத்து, கல்லறைத் தத்துவங்களையும் பழமையையும் பாதுகாக்கும் அவதியிலே, புதிய வளர்ச்சிகளுக்குக் குறுக்கே படுத்துக்கிடப்பதை இவர்கள் உணருகிறார்களில்லை. தங்களுடைய பிழைப்புச் சாசுவதமானது என்ற சுகக் கனவிலே இவர்கள் ஈடுபட்டிருப்பதுதான் பேதமை. வளர்ந்து வரும் நாளைய சமுதாயம் இவர்கள் இயற்றும் இலக்கியப் புரட்டுகளை மன்னிக்க மாட்டாது. அவர்களைச் சாட வேண்டும் என்பதற்காக நான் இதைக் கூறவில்லை. இவர்களுக்கு இலக்கிய வாழ்வு இல்லை என்பதை இவர்களே உணர்வார்கள். ஆனால், இவர்கள் இயற்றிய இலக்கியப் பாதகங்களைப் பற்றிய குறிப்புகள் நாளைய தலைமுறைக்குக் கிடைத்தல் அவசியம்' என்று எஸ். பொ. கூறினார்.

அந்த அவசியத்தை உணர்ந்தே இவற்றைத் திருக் கடைக்காப்பு என்ற இந்தப் பகுதியிலே குறிப்பிட நேருகின்றது.

## கொடியேற்றம்!

கைலாசபதி - சிவத்தம்பி ஆகியோருடைய கூட்டாட்சி இலங்கை வானொலியிலே கொடியுயர்த்திச் சுமார் ஒரு மாதமாகின்றது. புதிய வானொலி மாற்றங்கள் பற்றி அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் சிந்திய அபிப்பிராய நறுக்குகளின் சில சாம்பிள்கள். இவை என் செவிகளிலே விழுந்த கோலத்திலே தரப்படுகின்றன.

'கலைக்கோல நிகழ்ச்சி செய்வதிலிருந்து எஸ். பொவுக்குக் கல்தா! முழுக் கலைக்கோல நிகழ்ச்சிகளையும் இனி ஒருவரே செய்வார். அவர்தான் கைலாசபதி!'

'பேஷ், பேஷ்! கைலாசபதி நிகழ்த்திய முதலாவது கலைக்கோல நிகழ்ச்சியிலே சிவத்தம்பி கலந்து சிறப்பித்தார்!'

'பாவம் அரைச்சமாவை அரைக்கத் துவங்கிட் டார்!'

## அநியாத்தைக் கேளுங்கோ

'இந்த அநியாயத்தைக் கேளுங்கோ. நான் வானொலி ஊழியன். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைத் தயாரிப்பவன் நான். சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்பவன் நான். வந்து 'கொம்பயர்' பண்ணுவதற்கு ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அவருக்கு ஒரு நிகழ்ச்சிக்கு நூறு ரூபாய். மாதத் திற்கு நானூறு ஐநூறு அவருக்கு! என்னுடைய சம் பளத்தைக் கேட்டால் அழுவீர்கள்!'

'நான் திறமைக்கும் தகுதிக்கும் மதிப்பளித்து நிகழ்ச்சிகளைத் தயாரித்தேன். என்னைத் தூக்கி நிரு வாகப் பகுதிக்கு எறிந்திருக்கிறார்கள்!'

'புதிய ஆலோசனை சபை பெண் குரலை வெறுக் கின்றது. இல்லையென்றால், சற்சொருபவதியைக் கல் விச் சேவைக்கு அனுப்ப வேண்டிய நியாயம் என்ன?'

## வீழ்ச்சிகளும் உயர்ச்சிகளும்!

'பொன்மணியின் ஆதிக்கக்கொடி இறக்கப்பட் டது. வாழ்க சிவத்தம்பி!'

'சில்வஸ்ரர் வீழ்ந்தார்; ராஜா உயர்ந்தார்!'

'மாஸ்டர்! இந்நாட்டின் தலை சிறந்த நாடக ஆசிரியர் நீரும் நானுமல்ல. அது முருகையன் தானும். இந்த வானொலியிலேயே தமிழ் தெரிந்த ஊழியர்கள் இல்லையாம். எனவே, நாடகப் பிரதிகளைச் செப்பப் படுத்தும் கொந்துறாத்து முருகையனுக்கு! நாடகம் இனிக் கிசு கிசு எண்டு வளரும்!'



## நல்ல பிஸினஸ்

'முருகையன் ஒரு நல்ல பிஸினஸ்காரன், தன் சொந்த நாடகப் பிரதிகளை நுழைத்தும், தன் தம்பி யின் நாடகப் பிரதிகளை நுழைத்தும், தன் சொந்த நாடகத்தில் தம்பிக்கு நடிக்கும் சந்தர்ப்பம் அருளியும் அமோக யாவாரம் நடத்துறார்!'

'இப்ப அவர் கவிஞரல்ல; நாடக வித்தகர்!'

'இண்டைக்கு சிவத்தம்பி ஃபோன் பண்ணி ஸ்கி றிப்ட் பின்னேரம் அனுப்புறாராம், நாளைக்கு விசேட நிகழ்ச்சி ரெக்கோட் பண்ணவேணுமாம். 'செடூல்' பண்ணாத நிகழ்ச்சி.........'

'சிவத்தம்பி சொன்னால் அது ஓடர் தானே? .எப்ப வாம் ஒலிபரப்பவேணும்?'

'இரண்டு கிழமை இருக்கு. ஆனால், நாளை மறு நாள் அவர் யாழ்ப்பாணம் போகின்றாராம்!'

'அவர் சொல்ற போல செய்யும்.'

## பத்தயங்கள்

'பெற் பிடியும். நாடகத் தயாரிப்பாளராக சுந்தரலிங்கம் நியமிக்கப்படுவார்.'

'நானும் ஒரு பெற். பேச்சுப் பகுதிக்கு ஸ்ரீபதி நியமிக்கப்படுவார்.'

'அரசியலிலும் தொழில் துறையிலுந்தான் EMPIRE BUILDING என்பார்கள். இலக்கியத்திலும் அப்படியா?'

## மா ஓ பாவம்!

'சீன சார்பு கம்யூனிஸத்தின் பெயரால் இவர்கள் செய்யும் திருக் கூத்துகளைக் கேட்டால் மா வோ துங் நாக்கைப் பிடுங்கி எறிவார்!'

இப்படி எத்தனையோ தடல் புடல்களும், கெடு பிடிகளும்!

ஆனால், வானொலி நிகழ்ச்சிகளின் தரம் உயர்ந்திருக்கின்றதா?

'குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பதிலாக......' என்று தான் அடிக்கடி இலங்கை வானொலி அலறுகின்றது.

வானொலி நிகழ்ச்சிகளின் தரம் உயரவில்லை; அதன் தரம் தாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பது சாதாரண நேயர்களுடைய அபிப்பிராயம். ஆலோசனை சபை தன்னை அதிகார சபையாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. செவ்விகாண் சபைகளிலும் அவர்களே குந்தியுள்ளார்கள். வானொலி ஊழியர்கள் மத்தியிலும், சாதாரண நேயர்கள் மத்தியிலும் வீணான விரக்தியும் கசப்புமே பயிரிடப்படுகின்றன.

## மௌனம் கலையாதா?

'இத்தகைய ஒரு நேர்மையற்ற - இலக்கிய நலனுக்கோ அரசின் அரசியல் ஆதாயத்திற்கோ பாதகமான-கெடுபிடிகள் நடத்தப்படுவதற்கு அமைச்சர் குமாரசூரியரும், பிரதி அமைச்சர் மஜீதும் எத்தனை காலத்திற்கு மௌனச் சாட்சிகளாக அமர்ந்திருக்கப் போகின்றார்கள்?' என்று தேசாபிமானம் மிகுந்தவர்கள் கேட்க ஆரம்பித்துள்ளார்கள். இந்த அவலநிலையை எவ்வாறு செப்பமிடுதல் சாலும்?



## எஸ். பொ. எழுச்சி

எஸ். பொ. எந்த விஷயத்திலும் பிறருதவு வழியை நாடாதவர். குழி தோண்டும் பழக்கத்திற்கு மசியாதவர். 'பிட்டிஷ' எழுத்துக் கலை பயிலாதவர். அதே சமயம், 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' என்று தன் முதுகைக் காப்பாற்றிக் கொண்டாற் போதும் என ஒதுங்கிக் கொள்ளும் கோழையுமல்லர். தனக்குச் சரியெனத் தோன்றுவதை முகத்துக்கு நேராகப் பேசுவதும் எழுதுவதும் அவர் சுபாவம். இலக்கிய சத்தியத்திலே எஸ். பொ. கொண்டிருக்கும் கட்டித்த பக்தியினால், அவர் பலவிதமான வழிகளிலேயும் பொருளாதாரப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார். பல சிரமச் சிலுவைகளைச் சுமக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்.

இருப்பினும், அவர் பிறவிப் போராளி. சத்தியம் வெல்லும் என்ற நம்பிக்கையிலே அழுங்குப் பிடியர். இந்த நம்பிக்கையை எஸ். பொ. அறிக்கை தொனிக்கின்றது. கலை - இலக்கியத் துறையிலே ஈழத் தமிழ் எழுச்சி பெறவேண்டுமாயின் எஸ். பொ. அறிக்கை செயற்படுத்தப்படுதல் வேண்டும். தம்முடைய சிந்தனைகளை வலோற்காரமாகத் திணிக்காது இருப்பதற்காகத் தான் இதனை ஊறுகாய் போட்டு வைக்கும்படி கூறினாரோ என்று இப்பொழுது நினைக்கவுந் தோன்றுகின்றது.

## விளைவு என்ன?

'என் நூலை வெளியிடுங்கள். ஆனால், இதன் உடனடிப் பாதிப்பு என்ன என்பது எனக்குத்தெரியும். இந்தக் கருத்து முரண்பாடுகளை சொந்தக் குரோதமாக எடுத்துத் நமது மூளையைக் கைலாசபதி கசக்குவாரானால், பாட விதான அபிவிருத்தி நிலையத்திலிருந்து என்னை விரட்டுவதிலே முழுமூச்சாக பாடுபடக்கூடும். அதனால் எனக்கு நஷ்டமில்லை. வருங்காலச் சந்ததியின் உயர்ச்சிக்கு என் சிறிய சேவை பயன் படாது போகலாம். பாதகமில்லை. கைலாசபதியும்

(64ம்—பக்கம் பார்க்க)



மதுரகவி

# விகசித்த முல்லை

நினைவஞ்சலி

இரசிகமணி

எங்கும் நறுமணம் பரப்பி எல்லோருக்கும் இனிமை அளித்த முல்லைக்கொடியொன்று நேற்று வீசிய புயலால் திடீரென்று அடியோடு வீழ்ந்துவிட்டாற்போல, மதுரகவி நாகராஜன் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அந்த இனிய முகம்...அவரது வஞ்சகமற்ற பேச்சு...'வாத்தியார்' என என்னைக் கண்ணியம் குறையாமல் அவர் அழைக்கும் அழைப்பு எல்லாம் போய்விட்டது. அவரை நினைக்கும்போது எத்தனை இனிய நினைவுகள் என் மனத்திரையில் தோற்றுகின்றன!

முதன் முதலில், 1955ஆம் ஆண்டளவில் 'வீரகேசரி' நிருபர் திரு. சி. செல்லத்துரை நண்பர் நாகராஜனை அறிமுகப்படுத்தி, அவரைத் தகுந்தபடி பயன்படுத்தினால் புகழ்மிக்க எழுத்தாளராக வருவார் என்று என்னிடம் கூறினார். அடுத்து நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடத்த கவியரங்கமொன்றிலே, வராமல் இருந்த கவிஞர் ஒருவரின் இடத்தை நிரப்ப நாகராஜனைப் பாடும்படி தூண்டினேன். அவர் மேடையேறிப் பாட, பட்ட கூச்சம், நடுக்கம் இப்போதும் என் கண்முன் நிற்கிறது. பிற்காலத்தில் அவரில்லாத கவியரங்கமே சோபிக்காது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. மேலும், சென்னைமா நகரில் நடைபெற்ற உலகத் தமிழ்விழாக் கவிதைப் போட்டியிற் பரிசுபெற்று ஈழத்துக்கு புகழைத் தேடித்தந்தார் அவர்.

இதனையடுத்து 'மத்தாப்பு' என்ற குறுநாவலை எழுத்தாளர் ஐவர் எழுதிப் புத்தகம் ஆக்கிய காட்சி நினைவில் மிதக்கிறது. 1962ஆம் ஆண்டு நான் வெளியிட்ட 'மத்தாப்பு' என்ற நூலின்



முகவுரையில் அதுதோன்றிய வரலாற்றை விபரமாக எழுதியுள்ளேன். ஈழத்துப் பத்திரிகை உலகிலே ஐந்து எழுத்தாளர் (இ. நாகராஜன், கனக. செந்திநாதன், சு. வே.' குறமகள், எஸ். பொன்னுத்துரை) கூட்டு முயற்சியாக முதன்முதலில் எழுதிய குறுநாவல் அது. எங்கள் வீட்டிலே இ. நாகராஜன், எஸ். பொ., நான் ஆகிய மூவரும் சேர்ந்து திட்டமிட்டு, 'வீரகேசரி'யில் எழுதிய கதை அது. அதில் இ. நாகராஜனே முதலாவது அத்தியாயத்தைத் தொடங்கிவைத்தார்.

அப்படியான மனமொத்த கூட்டு முயற்சிகள் இனி எப்போது நடைபெறப்போகின்றன? முதலில் தொடங்கி வைத்து உற்சாக மூட்டும் எழுத்தாளர் எங்குதான் கிடைக்கப் போகிறார்? இதன் பிறகு, நவரசங்களையும் வைத்து — இ. நாகராஜன், கனக. செந்திநாதன், எஸ். பொன்னுத்துரை ஆகிய மூவரும் எழுதிய ஈழத்துச் சரித்திர நாவல் 'மணிமகுடம்' தோன்றிய விதம் நினைவில் வருகிறது.

என்னுடைய ஒட்டுப் புத்தகத்தை மீண்டும் பார்க்கிறேன். ''ஐந்து வர்ணங்களில் 'மத்தாப்பு' என்ற குறுநாவலை வாசகர்களுக்குத் தந்த 'ஞாயிறு வீரகேசரி'யின் அடுத்த இலக்கிய விருந்து—'மணிமகுடம்' பிரமாத விளம்பரம்! கீழே மூவரின் படங்கள்! அதை இப்போது பார்க்கிறேன். கண்ணில் நீர் மல்குகிறது. 15-4-62இல் முதலாவது அத்தியாயம்—முதலாவது ரசம் 'சாந்தம்'—வெளிவந்தது. ஆம், இங்கும் நாகராஜனே தொடங்கி வைத்து சாந்தம், வீரம், பயம் என்ற ரசங்களை அருமையாக எழுதினார். எங்கள் கூட்டு முயற்சிகளிலெல்லாம் அவரே முன்னணியில் நின்றார். அதனால்தானோ என்னவோ மரணத்திலும் எங்களை முந்திக்கொண்டு அவர் போய்விட்டார்.

'நீதிக்கரங்கள்' என்னும் குறுங்காவியம் தோன்றிய வரலாறும் புதுமையானது. குரும்பசிட்டி, சன்மார்க்க சபையின் முப்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் (1965இல்) 'நீதிக்கரங்கள்'—பாரதக் கதையை ஐந்து கவிஞர்கள் பாடினார்கள். இங்கேயும் கதையை நாகராஜனையே தொடங்கி வைக்கவேண்டும் என்று வேண்டினேன்.

'மத்தாப்பு' — 'மணிமகுடம்'—'நீதிக்கரங்கள்' என்ற மூன்று படைப்பிலும் அவர் என்னுடன் சேர்ந்து நின்றார். அதனால் நாங்கள் பெருமைப்பட்டோம்; உற்சாகமுற்றோம். இனி அப்படி ஒரு நண்பரை—எழுத்தாளரை—எங்கே காணப்போகிறேன்? சாப்பிடும் போதும் கதை சொல்லுவார். தேநீர் பருகிக்கொண்டே எந்த அவசரத்திலும் கவிதை எழுதுவார். 'அடித்தல்' 'திருத்தல்' என்பது அவர் வரையில் கிடையாது. 'பிறகு,' 'பின்னை' என்பது அவரது அகராதியில் கிடையாது. உடனே—

சொன்ன உடனே— – அவர் எழுதித்தள்ளும் வேகத்தைப் பார்த்தால் யாரும் பிரமிப்பார்கள்!

அவருடைய சிறுகதைத் தொகுதியாக 'நிறைநிலா' நாவலாக 'வாழ்க்கை ஒரு வசந்தம்' காவியமாக 'குயில் வாழ்ந்த கூடு,' கவிதை நாடகமாகச் 'சிலம்பு சிரித்தது' சிறுவர் நூலாகச் 'சிறுவர் பாடல்' என்ற ஐந்து நூல்கள் வெளிவந்திருக்கின்றன. நாகராஜன் பிறர் வெறுப்பதையோ, புகழ்வதையோ ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அவர் வழி தனி வழி!

---

சிவத்தம்பியும் நடத்தும் இலக்கியச் சர்வாதிகாரத்திற்கு எதிராகக் குரல் எழுப்புதல் உடனடித் தர்மம். ஒரு சமுதாயம் உய்வதற்காக என் சொற்ப ஆற்றலுக்கேற்ப ஓர் அறிக்கையைத் தயாரித்துள்ளேன். இப்பொழுது நிலவும் அவல நிலையைப் போக்குவதற்கு, இந்நூல் ஓர் அருட்டுணர்வாக அமைந்தாலே போதும்,' என்று எஸ். பொ. கூறினர்.

இந்நூல் உங்களுக்கு முன்னுல் வைக்கப்படுகின்றது. இதிலே கூறப்பட்டுள்ள ஆலோசனையைச் செயற்படுத்துதல் சங்கையானது என்பதற்கு நான் வழக்குரைக்கத் தேவையில்லை. எனவே, இலக்கிய சத்தியமுள்ள எழுத்தாளரும், சுவைஞரும் மட்டுமல்லாமல், தேசாபிமானமுள்ளவர்களும் இப்பணியை இயற்ற முன்வருதல் வேண்டும். இந்த வேண்டுதலை இறை நம்பிக்கையுடனும், இதய சுத்தியுடனும் உங்கள் முன் வைக்கின்றேன்.

---

Edited, Printed and Published by M. A. Rahman at the Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13. Hony. Associate Editor: S. Ponnuthurai.

தமிழன் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நல்லாயப் பிரசுரம்

# சென்னை-இந்தியா தமிழ் டைரக்டரி

1967.

## MADRAS-INDIA TAMIL DIRECTORY

(சென்னை நகர்-தமிழகம்: 365 பஞ்சாயத்து யூனியன்கள், 70 முனிசிபாலிட்டிகள்-நகரங்கள்-பட்டணங்கள்-கிராமங்கள்-க்ஷேத்திரப்பதிகள்-மற்றெல்லா விவரத்துடன்-இந்தியாவின் 17 மாகாணங்கள் சகல விவரத்துடன்-சிலோன்-மலேயா-சிங்கப்பூர்-பாகிஸ்தான்-உலகம்-அகில உலக நாடுகள் விவரம் அடங்கியது.)

வாணிபம், விளம்பரம், உற்பத்தி, தொழில், பிரதிநிதித்துவம், விநியோகம் இன்னோரன்ன பிறவற்றின் அறிவுக் களஞ்சியம், தமிழ் நாட்டின் வனப்பு, வளம் வாணிபம் மற்றெல்லா விவரமும் கொண்ட பிரசுரம்.

(சுமார் 27 வரை படங்கள், 350 ஆப்டோன் படங்களுடன் ½ டெம்மி சைஸ், சுமார்-720 பக்கங்கள் மஹாபலிபுரம் வர்ணஜால முகப்பு அட்டை கொண்டது.)

தமிழக அரசு சபாநாயகர், தலைமை அமைச்சர், மற்ற ஏனைய அமைச்சர்கள் நல்வாழ்த்து செய்தியுடன் வெளிவந்துள்ளது.

ஆசிரியர் :

திரு டி. கே. நந்திகேசுவரன்

ஆசிரியர்: எக்ஸ்போர்ட் இந்தியா பத்திரிகை (ஆங்கிலம்)

பிரசுரம் :

எக்ஸ்போர்ட் இந்தியா ஜர்னல்

பப்ளிகேஷன்ஸ்

8, பிட்டர்ஸ் ரோட், சென்னை-14.

போன்: 85237 தமிழக அரசு

விலை ரூ. 9/- தபால் செலவு ரூ. 1/50

இன்றே உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்யவும்

ILAMPIRAI - November - December 1972

REGISTERD AS A NEWSPAPER IN CEYL




Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13